அறைவு 04 இயம் 30 Feb 27-March 04, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS
LIFE SKILL
UK SPONCER
VISA
CALL:
0770203201

HELLO MOBILE WORLD

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# வடக்குகிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் எதிர்ப்பார்கள்


முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி

வடக்குகிழக்கு மாகாணங்களை இணைப்பதென்பதை முஸ்லிம்கள் எப்போதுமே எதிர்ப்பார்கள்.

அவர்களுடன் பேசி அவர்களது விருப்பத்துடன் அந்த இணைப்பு நடைபெறுமானால் மட்டுமே அவ் - விணைப்பை முஸ்லிம்களளால் ஏற்றுக்கொள்ள முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ரி. ஹசன் அலி ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்பின் ஊடாகத் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கான அதிகாரங்களைப் பரவலாக்கிக் கொள்வதன் ஊடாக இனப்பிரச்சனை- க்கான தீர்வை எட்டிக்கொள்ளும் நம்பிக்கையை இந்தப் புதிய அரசாங்கம் உருவாக்கியிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மைப் பிரச்சனைகள் தொடர்பாக தற்போதும் மிகப் பெரிய இடைவெளியே காணப்படுகின்றது. சமஷ்டித் தீர்வையா அல்லது கூட்டாட்சியையா அரசாங்கம் வழங்கத் தயாராக இருக்கின்றது என்பதில் தற்போதுவரை தெளிவி- ன்மை காணப்படுகின்றது.

தீர்வுகள் தொடர்பாக சிங்கள இனமும் தமிழினமும் பல்வேறுபட்ட



# இராணுவச் சதிக்கு அஞ்சுகின்றனரா ரணில் - மைத்ரி...?



பக் 08



# அமெரிக்கத் தளம் திருகோணமலையில்



திருகோணமலையில் தளம் அமைக்கும் திட்டம் அமெரிக்காவுக்கு இருப்பதாக எச்சரித்துள்ளார், முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

சோசலிச மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்தி -ப்பில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய அவர்,

சிறிலங்காவுக்கான தூதுவராக நியமிக்கப் - படுவதற்கு முன்னர், அதுல் கெசாப், அமெரிக்க இராஜா - ங்கத் திணைக்கள - த்துக்கு இவ்விடயம் தொடர்பாக அனுப்பியிருந்த விரிவான அறிக்கை ஒன்றின் அடிப்படை - யில் தான், இந்தக் குற்றச்சாட்டை சுமத்துகிறேன்.

திருகோணமலைத் துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள....

பக் 17

உலக வலையமைப்பில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்




உங்கள் பிரதேசத்தில் டிஸ் TV விற்பனையாளராகிக் கவர்ச்சிகரமான நிரந்தர வருமானங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

அழையுங்கள்
மாவட்ட விநியோகத்தர் :
நியூ ரிங்கோ ஸ்டேசனர்ஸ் தனியார் கம்பனி
இல. 27, 3ம் குறுக்குத்தெரு, திருகோணமலை.
026 2223071 - 0777697184

- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# துருப்புச் சீட்டாகும் தாயகப் பிரதேசம் வரமா?

புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதன் ஊடாக இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்துவரும் நல்லாட்சிக்கான புதிய அரசாங்கம் அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பான மக்களின் மற்றும் பொது அமைப்புக்களின் யோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசினால் மக்கள் கருத்தறியும் அமர்வுகள் வடக்கிலும் கிழக்கிலும் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவ்வமர்வுகளின் போது வடக்குகிழக்கின் இணைப்பு என்னும் துருப்புச் சீட்டை வடக்குகிழக்கில் வாழும் தமிழ் பேசும் இரண்டு இனங்களும் தமது வாதத்திற்கேற்பப் பயன்படுத்தியிருப்பதை காணமுடிகின்றது.

தேசிய தமிழ் இனத்தில் கிழக்கு மக்கள் வடக்குகிழக்கு இணைவதை விரும்பும் அதே வேளை சிறுபான்மை முஸ்லிம் மக்களின் முக்கிய பிரதிநிதிகள் அவர்கள் அரசியல் சார்ந்தவர்களாகவோ அல்லது அரசியல் சாராதவர்களாகவோ இருக்கின்ற போதிலும் வடக்குகிழக்கு இணைவதை விரும்பவில்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் வடக்குகிழக்கின் இணைப்பைப் பெரும்பாலான முஸ்லிம்கள் விரும்பவில்லை எனத் தெரிவித்திருக்கின்றார். திருகோணமலையில் இயங்கும் பொது நிறுவனமான மூதூர் பீஸ் ஹோம் அமைப்பானது புதிய அரசியல் அமைப்பில் எந்தவொரு மாகாணமும் மற்றொரு மாகாணத்துடன் இணைக்கப்படக்கூடாது எனப் பொதுப்படையாகத் தெரிவித்திருக்கின்ற போதிலும் அக்கூற்றின் உள்ளடக்கம் முதன்மைப்படுத்திநிற்பது வடக்குகிழக்கு இணைப்பை என்பதை சாதாரணமாகப் புரிந்துகொள்ள முடியும்.

இவ்விரு கருத்துக்களும் விடுக்கப்பட்டிருக்கின்ற பிரதேசங்களை மையப்படுத்திப் பார்க்கும் போது தெற்கு மற்றும் கிழக்கிலும் பேரினவாதச் சிங்கள எதிர்ப்புக்கு சமமான அளவில் முஸ்லிம்களும் தமிழர் தாயகத்தை உடைத்து வைத்திருக்கவே விருப்பப்படுவதாகவே தெரிகின்றது.

ஆனால் தமிழரின் அரசியல் கட்சிகளில் மிகப் பலம்வாய்ந்த அமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் ஆதரவைக் கணிசமாகப் பெற்று உறுதியான நிலையை பெற்றுவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் புதிய அரசியல் அமைப்பிற்கான வரைவைத் தயாரித்து வெளியிட்டிருக்கும் தமிழ் மக்கள் பேரவை மற்றும் தமிழர்களின் பொது நிறுவனங்கள் ஆகியன முன்மொழிந்திருக்கும் அரசியல் திருத்த முன்மொழிவுகளில் இவ்வனைத்து அமைப்புக்களும் வடக்குகிழக்கு இணைக்கப்பட்ட தமிழர் தாயகத்திலேயே தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்னும் ஒரு விடயத்தில் தமது குரலை ஒற்றாகவே எழுப்பியிருக்கின்றன.

மாகாணசபைச் சட்டமூலம் உருவாக்கப்பட்ட 1987ல் வடக்கும்கிழக்கும் தமிழர்களின் தாயகப்பகுதி என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையிலேயே மாகாண சபை உருவாக்கப்பட்டது.

அதற்கமைய தமிழர் தாயகத்தை தனிமாகாணமாக உருவாக்கியநிலை பேரினவாதச் சிந்தனையின் பாற்பட்டு மீண்டும் பிரிக்கப்பட்டுள்ளமை முக்கியமானது. வடக்கும் கிழக்கும் இணைந்திருந்தபோது அம்மாகாணத்தில் வாழ்ந்த ஏனைய இரு இனங்களான தேசிய சிங்கள இனமும், சிறுபான்மை முஸ்லிம் இனமும் எவ்விதமான அடக்கு முறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டமைக்கான சான்றுகள் இல்லை.

அவ்வாறான நிலை அவ்விரு மாகாணங்களும் பிரித்துத் தனித்தனியான அலகுகளாக நிர்வகிக்கப்படுகின்றபோது கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு இல்லாதொழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது கிழக்கு தனியாக நிர்வகிக்கப்படுகின்ற போது தமிழ மக்கள் தமது இருப்பு தொடர்பானதொரு அச்ச நிலையை எதிர்கொள்வதைக் காணமுடிகின்றது.

கிழக்கில் விசேடமாக திருகோணமலையில் இரால்குழி கிராமத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள நிச்சயமற்ற தன்மை, கிழக்கு மாகாணசபையால் வழங்கப்பட்ட நியமனங்களின் போது முன்னெப்போதும் பின்பற்றப்பட்டுவந்த திறமை அடிப்படையைத் தவிர்த்து இனவிகிதாசார அடிப்படையைப் பின்பற்றியமையால் தமிழ் மக்கள் இழந்த வேலைவாய்ப்புக்கள், கன்னியா வெந்நீரூற்றுக்கு நிகழ்ந்து வரும் ஆதிக்கம் போன்ற பல நூற்றுக்கணக்கான விடயங்கள் அச்சமூட்டும் அடக்குமுறையின் வடிவங்களாகவே மக்களால் உணரப்படுகின்றன.

இந்த நிலையில் வடக்குகிழக்கின் இணைப்பானது தமிழ் மக்களின் தேசிய இனஇருப்பை வலிதாக்கும் மிகமுக்கியமான விடயமாகப் பார்க்கப்படுவதுடன் தாயகம் என்ற வார்த்தையின் சந்தத்துடன் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கும் நிலப்பிரதேசமாகவே வடக்குகிழக்கும் கொள்ளப்பட வேண்டும். தமிழ்த் தாயகப் பிரதேசம் துருப்புச்சீட்டாகிப்போயிருப்பது எமது சாபம் தான்.

# ஐக்கியராச்சிய ரோட்டறி உறுப்பனர்கள் திருமலைக்கு வருகை

ஐக்கியராச்சிய ரோட்டரி கழக அங்கத்தவர்கள் கடந்த 25.02.2016 அன்று திருகோணமலை ரோட்டரி கழகத்திற்கு வருகை தந்திருந்தனர்

மைக் லவ் தலைமையில் வருகை தந்திருந்த 14 ஐக்கிய ராச்சிய உறுப்பினர்கள் மூதூர் கிழக்கு பாடசாலை மாணவர்கள் தொடர்பான திட்டங்களை ஆதரிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.



# தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய மாநாடு திருகோணமலையில்

அச்சுதன்

தமிழ் தேசியக் கூட்டமை -ப்பின் பங்காளி கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 9வது தேசிய மாநாடு 27.02.2016, 28.02.2016 சனி, ஞாயிறு தினங்களில் திருகோணமலையில் இடம்பெற உள்ளதாக ரெலோவின் நிர்வாக செயலாளர் நித்தி மாஸ்டர் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் கட்சியின் புதிய தலைமைத்துவ உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன், பல முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்படும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விவகாரம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு பிரச்சினை போன்ற விடயங்கள் ஆராயப்பட உள்ளது. 27ம் திகதி சனிக்கிழமை கட்சியின் மாநாடு நடத்தப்படுவதுடன் 28ம் திகதி மாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்கள் பொதுமக்களுக்கும் விளக்கமளிக்கும் பேராளர் மாநாடு ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக நித்தி மாஸ்டர் மேலும் தெரிவித்தார்.

# "தோப்பூர் வைத்தியசாலை தரமுயர்த்தப்படும்" மாகாணசபை உறுப்பினர் அன்வரின் முயற்சிக்கு பதில்

தோப்பூர் வைத்தியசாலையைத் தரமுயரத்தித் தருவதாகக் கிழக்கு மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் ஏ.எல்.எம் நசீர் உறுதியளித்துள்ளார்.

வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கின் வேண்டுகோளுக்கிணங்க கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வரின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர் அவர்களோடு கடந்த 23ம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் பெற ஆவணங்களை சமர்ப்பித்து தருவதாகவும் அதனூடாக அபிவிருத்தி செய்வதாகவும் வாக்குறுதி அளித்ததுடன் எதிவரும் மார்ச் மாதம் மேலதிகமாக ஒருவைத்தியரையும் இருதாதியர்களையும் நியமித்து தருவதாகவும் வாக்குறுதி அளித்துள்ளார். குறித்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் லாஹிரும் கலந்துகொண்டார்



# அன்வரின் உதவியில் ஒளியூட்டும் திட்டம்

திருகோணமலை ஜமாலியா மீனவர் கூடுறவு சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கிழக்கு மாகான சபை உறுப்பினர் ஏ.எம்.அன்வர் அவர்களின் 2015ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு நிதி ஒதுக்கீட்டில் புதிதாக மின்கம்பம் மற்றும் மின்விளக்குகள் அமைக்கப்பட்டன.

ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இவ்வொளியூட்டும் திட்டம் கடந்த சனிக்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டது.

# நிர்வாக சேவைப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

மிக விரைவில் இடம்பெறவுள்ள இலங்கை நிர்வாக சேவை (SLAS) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த -மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு சமூக அபிவிருத்திக்கான வள நிறுவனத்தால் எதிர்வரும் 27.02.2016 முதல் பிரதி சனி ஞாயிறு தேறும் காலை 9.00 மணிக்கு திருகோணமலை பெருந்தெரு விக்னெஸ்வரா மகா வித்தியால -யத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே பரீட்சாத்திகள் மேலதிக விபரங்களை அறிய விரும்பினால் 0779789751 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ளலாம் என சமூக அபிவிருத்திக்கான வள நிறுவன நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

# கிராமசேவையாளர்கள் சமாதானநீதவான்களாகின்றனர்

அனைத்துக் கிராம சேவையாளர்களும் சமாதான நீதவான்களாகத் தொழிற்படத்தக்க வகையில் அரசின் வரத்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி தமது பிரதேசச் செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சமாதான நீதவான்க - ளாகக் கிராம சேவையாளர்கள் தொழிற்படலாம்.



கணனி வடிவமைப்பாளர்களுக்கான வேலைவாய்ப்பு
அடிப்படைச் சம்பளம் ரூபா 10,000 + மேலதிக நேரக் கொடுப்பனவுகள்
அழையுங்கள் - 0777 555 738

# மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## சர்வதேச தலையீடு குறித்து விசாரணை செய்யப்படும்

### வெளிவிவகார அமைச்சர்



இலங்கையின் 26 வருடகால யுத்தத்தின் போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளின் போது சர்வதேச தரப்பினரை இணைத்துக் கொள்வது தொடர்பில் ஆராய்வதாக, அமெரிக்கா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வொசிங்டனில் இடம்பெற்ற நிகழ்வென்றில் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகள் பக்கச்சார்பின்றி இடம்பெற வேண்டியது மிக முக்கியமானது என்று கூறியுள்ள அவர், விசாரணைகள் பக்கச்சார்பற்ற முறையில் நடைபெறுகின்றது என்பதனை உறுதி செய்ய சர்வதேச தரப்பினரை இணைத்துக் கொள்வது குறித்து ஆராய்வதாக குறிப்பிட்டுள்ளார். அவர்கள் சர்வதேச நீதிபதிகளாக அல்லது இரசாயன பகுப்பாய்வாளர்களாக அல்லது விசாரணையாளர்களாகவும் இருக்கலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளின் போது வெளிநாட்டு நீதிபதிகள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகளின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனினும், போர்க்குற்றங்கள் குறித்த பாரபட்சமற்ற விசாரணைகளின் போது வெளிநாட்டவர்களின் பங்களிப்பு தேவையல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியிருந்தார்.

இதேவேளை இந்த மாத ஆரம்பத்தில் இலங்கை வந்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், போர்க்குற்ற விசாரணைகளில் இலங்கை மீது எந்தவொரு விடயத்தையும் திணிக்கவில்லை, எனினும் அனைத்து நடவடிக்கைகளும் பக்கச்சார்பற்ற சுயாதீனமானதாக இருக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் போர்க்குற்ற விசாரணைகளின் போது சர்வதேச பங்களிப்பு தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது என்று மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

## த.தே.கூட்டமைப்பின் சித்தார்த்தன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்

உண்ணாவிரதத்தை முன்னெடுத்துள்ள அரசியல் கைதிகளை, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் நேரில் சென்று பார்வையிட்டபோது அரசியல் கைதிகள் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், மெகஸின் சிறையிலுள்ள இந்த அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தியே உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். குறித்த பேச்சுவார்த்தையின் பின்பே இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக முடிவு எடுக்க முடியும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சிவசக்தி ஆனந்தன் கருத்து வெளியிடுகையில், குற்றம் செய்யாதவர்களும் பல வருடங்களாக அரசியல் கைதிகளாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த அரசியல் கைதிகளுக்காக அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் பல வருடங்களாக இவர்களது வழக்குகள் பிற்போடப்பட்டுள்ளன.

இது குறித்த நடவடிக்கைகள் இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## மார்ச் 11 வரை விளக்கமறியல்

வவுனியா □ உக்குளாங்குளம் பகுதியில் 13 வயது மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவி வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மார்ச் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா காவல்துறையினரால் சந்தேகத்தின் இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இருவர் காணாமலாக்கப்பட்டுள்ளனர்

மன்னார்

மன்னார் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற மீன்பிடிப் படகொன்றின் மீது, மற்றுமொரு படகில் வந்த சிலர் தாக்குதல் மேற்கொண்டதால், அப்படகில் இருந்த மூன்று மீனவர்களில் ஒருவர், கடலில் குதித்து சுமார் 10 கிலோமீற்றர் தூரம் நீந்தி கரை சேர்ந்துள்ளார். ஏனைய இருவரும் மாயமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தின் போது, மேற்படி மீனவர்கள் மூவர் மீதும் கடுமையாக தாக்குதல் நடத்தப்பட்டதாக உயிர் தப்பிய மீனவர், காவல்துறையிடம் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மாயமாகியுள்ள மீனவர்கள் இருவரையும் தேடும் பணியில் கடற்படையினரும் காவல்துறையினரும் ஈடுபட்டுள்ளனர்.

## தொடரும் உண்ணாவிரத போராட்டம்



கொழும்பு புதிய மெகசின் மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் சிறைச் சாலையில் இரண்டு கைதிகளும், கொழும்பு புதிய மெகசின் சிறைச்சாலையில் 14 கைதிகளும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும், ஊடகப் பேச்சாளருமான துஃர உபுல்தெனிய குறிப்பிட்டார்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த நான்கு கைதிகள் சுகவீனமுற்ற நிலையில் சிறைச்சாலைகள் வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தங்கள் மீதான நீதிமன்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கோரி அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உண்ணாவிதப் போராட்டத்தை கைவிடுமாறு இந்த கைதிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் அவர்கள் அதனை நிராகரித்ததாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த கைதிகள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கின் ஆவணங்களை சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்துள்ளதாக சிறைச் சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய மேலும் கூறினார்.

## முன்னாள் சனாதிபதியின் பிரதம பதுகாப்பு அதிகாரி மீது சோதனை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின், பிரதம பாதுகாப்பு அதிகாரியான மேஜர் நெவில்கேவின், மெதமுலனயில் அமைந்துள்ள காணியில் பல இடங்கள் பெக்கோ இயந்திரத்தை கொண்டு தோண்டப்பட்டது.

எனினும், தோண்டப்பட்ட இடங்களிலிருந்து, பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் பொருட்களோ அல்லது பெறுமதி வாய்ந்த பொருட்களோ மீட்கப்படவில்லை என்று அறியமுடிகின்றது.

காவல் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 20 பேர், இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பணம், தங்க நாணயங்கள் மற்றும் ஆயுதங்கள் இருப்பதாக இரகசிய காவல்துறையினருக்கு கிடைத்த தகவல்களை அடுத்தே, அந்த காணி தோண்டப்பட்டதாக அறியமுடிகின்றது.

## "இதற்கும் பேரவைக்கும் தொடர்பில்லை" "நாம் கூறவில்லை"



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் நாகரீகமான உடை அணிந்து விரிவுரைகளுக்கு சமூகமளிப்பது விரும்பத்தக்கது என யாழ் பல்கலைக்கழக பேரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரெட்ணம் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் ஆடை விடயத்தில் பேரவை எதுவித முடிவையும் எடுக்கவில்லை என்றும் இது குறித்து பீடாதிபதிகளுக்கோ துறைத் தலைவர்களுக்கே எந்தவொரு அறிவித்தலையும் அனுப்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் இணைய ஊடகங்களில் வெளியாகும் செய்திகளுக்கும் பல்கலைக்கழக பேரவைக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை எனவும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

பீடாதிபதியொருவரே குறித்த ஆடை தொடர்பிலான சுற்றுநிருபத்தை வெளியிட்டிருந்த நிலையில் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருந்தமை குறிப்படத்தக்கது.

## கூட்டு எதிர்க்கட்சியினருக்கு நேர ஒதுக்கீட்டிற்கான இணக்கப்பாடு

கூட்டு எதிர்க்கட்சியினருக்கு நாடாளுமன்றில் உரையாற்றுவதற்கான நேர ஒதுக்கீட்டை மேற்கொள்வதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம், எதிர்கட்சியினர் மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கு இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய நேர ஒதுக்கீட்டிற்கான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் சபாநாயகர் கரு ஜயசூரிய கூட்டு எதிர்க்கட்சியினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், இனிமேல் காரசாரமான விவாதங்களுக்கான தேவை இருக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களை தனியான குழுவாக அங்கீகரிக்க வேண்டுமென கடந்த பல வாரங்களாக கூட்டு எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்து வந்த நிலையில், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என சபாநயாகர் கரு ஜயசூரிய தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள்

## "இந்தியத் தமிழர்" என்பது உண்மைக்கு புறம்பானது

மலையகம்



மலையகத் தமிழ் மக்களை 'இந்திய வம்சாவளி தமிழர்' என ஶ்ரீலங்காவில் சொல்லுவது ஒரு மாயை என. தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் தெரிவித்துள்ளார். மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகள் சம்பந்தமான ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க முன்வைத்த ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்திய வம்சாவளி தமிழர் எனும் பதம் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் அது உண்மையில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஶ்ரீலங்காவின் சட்ட ஏடுகளில் 'இந்திய தமிழர்' என்றே இவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். இதனை நாம் விரும்பவில்லை. அதேநேரம் மலையகத் தமிழர் எனும் அடையாளத்தை மலையக மக்கள் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக பண்பாட்டு அடிப்படையில் பேணி வருகின்றனர். இன்று இந்த மக்களுக்காக குரல் கொடுக்க முன்வந்திருக்கும் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் அனைவரும் அடுத்து கொண்டுவரப்படவிருக்கும் புதிய அரசியலமைப்பின் போது இதே ஆதரவை வழங்கி மலையக மக்களது உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் தங்களை 'இலங்கைத் தமிழர்களாக' பதிவு செய்துகொண்டுள்ள நிலையில் இந்தியத் தமிழர் எனும் அடையாப்படுத்தலின் கீழ் உள்ள மலையகத் தமிழரை அடையாளப்படுத்த புதிய சொற்பதங்களை தேடிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

மலையகத் தமிழ் மக்களின் அனைத்து அடிப்படை அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு அரசியலமைப்பு ரீதியாக நிலைநாட்டுவதற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மலைமுரசு MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## அதிக இலாபத்தை ஈட்டிக் கொள்ளும்

### இலங்கையில் உள்ள இந்திய நிறுவனம்

உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலை குறைந்துள்ள நிலையில், இலங்கையில் உள்ள இந்திய எரிபொருள் விற்பனை நிறுவனம் அதிக இலாபம் சம்பாதித்துள்ளதாகவும் நாடாளுமன்ற உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், எரிபொருள் விலை குறைந்துள்ளதன் பயனை நாட்டு மக்களுக்கு வழங்காது, இந்திய நிறுவனத்திற்கு வழங்கியமையானது, தேர்தல் வெற்றிக்காக இந்தியாவுக்கு வழங்கிய நிவாரணமா எனவும் அவர் கேட்டுள்ளார். எனினும் கடந்த காலத்தில் அரசாங்கம் பெற்றுள்ள கடனை திருப்பி செலுத்தி வருவதன் காரணமாக விலையை குறைக்க முடியாதிருப்பதாக ஆளும் தரப்பில் பதிலளித்த பெற்றோலிய துறை பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

## "அதிகாரங்கள் எப்பொழுதேனும் குறையலாம்" சனாதிபதி



அதிகாரம், அதிகாரத்திற்காக அல்ல என்றும் அதை மக்களின் நன்மைக்காக பயன்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார். அதிகாரத்திற்கு வந்த அனைவரும் எந்தவொரு நேரத்திலும் அதிகாரத்திலிருந்து கீழே விழலாம் என்பதை மனதில் நிறுத்தி செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

காலி முகத்திடல் ஹோட்டலில் இடம்பெற்ற மைத்திரி மிதுரோ (மைத்திரி நண்பர்கள்) அமைப்பின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

2015ம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால் தேர்தலில் வாக்குறுதி வழங்கிய 100 நாள் வேலைத் திட்டத்தை இதைவிட வெற்றிகரமாக முன்னெடுத்திருக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## மண்டைக்கல்லாற்றில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் (ஏ - 32 வீதி) பூநகரி, மண்டைக்கல்லாறு பகுதியில் இராணுவத்தினர் விசேட சோதனை நடவடிக்கையை நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொண்டனர்.

பஸ்கள் தவிர்த்து ஏனைய வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டதுடன் அதில் பயணித்தவர்கள் உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, ஆள் அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டதுடன், அவர்களின் உடமைகளும் சோதனைக்குட் படுத்தப்பட்டன.


சோதனை இடம்பெற்ற இடத்துக்குச் சற்றுத்தொலையில் இராணுவத்தினர் சிலர் பயிற்சிகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் நீண்டகாலத்துக்கு பின்னர் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

## வளைந்த முதுகெலும்பை நேராக்கி காலி வைத்தியர்கள் சாதனை

பிறப்பிலே முள்ளந்தண்டு வளைந்திருந்த பாடசாலை மாணவனை சத்திர சிகிச்சையின் மூலம் மீண்டும் சாதாரண நிலைமைக்கு கொண்டு வந்து இலங்கை மருத்துவர்கள் வியத்தகு சாதனை புரிந்துள்ளனர். காலி கரம்பிடிய வைத்தியச்சாலையிலே இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இரண்டு கட்டங்களாக நடந்த இந்த சத்திரசிகிச்சையின் பின் குறிந்த மாணவனுக்கு வழங்கப்பட்ட விசேட மருத்துவ உடையின் உதவியுடன் நிமிர்ந்து சாதாரண மனிதர்களை போல் நடக்க முடிகின்றது. இவன் இந்த வருடம் க.பொ.த சாதாரணத் தர பரீட்சை தோற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சத்திர சிகிச்சையை பற்றி தெரிவித்த நரம்பியல் விசேட வைத்தியர் திபால் அத்தநாயக, 17 வயது தொடக்கம் 21 வயதெல்லையிலேயே எலும்புகள் தொடர்பான சத்திர சிகிச்சைக்கு மிகவும் உகந்த காலமாகும். அவ்வயதிலே எலும்புகள் ஒன்றுடன் பொருந்துவது இலகு. இந்த மாணவனின் வயது 17 என்பதால் இந்த சத்திரசிகிச்சை இலகுவாக செய்ய கூடியதாக இருந்தது. மாணவனின் எலும்புக்கூட்டை பிரித்து அவனின் வளைந்த எலும்பை முற்றாக அகற்றி பின்னர் அவனின் முதுகு புறத்தில் சிகிச்சை மேற்கொண்டு இரண்டு உலோகத் தகடுகளை பயன்படுத்தி அம் மாணவனின் முதுகு வளைவை சரிசெய்தோம். இச் சிகிச்சையில் 100 வீதம் சரிசெய்ய முடியாவிட்டாலும் முடிந்தளவு அம்மாணவனின் முதுகு வளைவை சரிசெய்துள்ளோம் என்று கூறினார்.



## மீண்டும் அகழ்வுப் பணி ஆரம்பம்

முல்லைத்தீவு விசுவமடு பிரதேசத்தில் இராணுவ சிப்பாயின் உடலை கண்டபிடிப்பதற்கான அகழ்வு பணிகள் மீண்டும் நேற்று வெள்ளிக் கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு விசுவமடு இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவ சிப்பாயை சக சிப்பாய் கொலைசெய்து புதைத்ததாக சந்தேகிக்கப்படும் இடத்தில் இந்த அகழ்வு இடம்பெற்று வருவதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 9 ஆம் திகதி விசுவமடு பாடசாலைக்கு பின்புறமாக விருந்த காணி ஒன்றில் இந்த அகழ்வு பணி இடம்பெற்றபோதும் எந்தவொரு தடயப்பொருட்களும் காணப்பட வில்லை.

கடந்த அகழ்வின் போது உயிரிழந்த இராணுவவீரரின் மனைவி மற்றும் தாய் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். இந் நிலையில் மீண்டும் அகழ்வு பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மேலும் 12வர் தாயகம் திரும்பினர்

தமிழகத்தில் தங்கியிருந்த மேலும் 12 இலங்கை அகதிகள் நேற்று தாயகம் திரும்பினர். இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அலுவலகத்தின் வசதிப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புடன் இவர்கள் தாயகம் திரும்பினர். விமான நிலையத்தில் நடத்தப்பட்ட விசாரணைகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகளை அடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேற அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, தமிழகத்தி லிருந்து நாடு திரும்பியவர்களுக்கு 3 தொடக்கம் 6 மாதங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட வுள்ளதாக புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானஜோதி குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டில் 429 இலங்கை அகதிகள் தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

ரஷ்யா

## ரஷ்யாவிற்கெதிராக அச்சுறுத்தல்



சிரியாவில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மோதல் தவிர்ப்பு அமுலுக்கு வந்துள்ள நிலையில் அனைத்து விதமான தாக்குதல்களையும் நிறுத்துமாறு ரஷ்யா உள்ளிட்ட தரப்பினரை எச்சரித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

இந்த மோதல் தவிர்ப்பானது வெற்றிகரமாக அமுலுக்கு வரும் பட்சத்தில் இதுவே சிரியாவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கான முதல் படியாக அமையும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை அழித்தொழிக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியதுடன் இதன் வெற்றியானது சிரிய அரசாங்கம் மற்றும் அதனோடு இணைந்த அமைப்புகள் தங்களின் பொறுப்புகளில் கவனம் செலுத்துவதாக காணப்படும் எனவும் சுட்டிக் காட்டினார்.

இந்தியா

## தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்றார் நளினி

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 25 ஆண்டுகளாக வேலூர் சிறையில் இருந்து வரும் நளினி, மறைந்த தனது தந்தையின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள பரோலில் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள சகோதரர் வீட்டுக்கு வந்தார்.

தந்தையின் இறுதி சடங்கில் பங்கேற்பதற்காக நளினிக்கு பரோல் வழங்கப்பட்டதை அடுத்து கடந்த புதன்கிழமை காலை வேலூர் சிறையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் அவர் சென்னை வந்தார். இறுதி சடங்கு முடிந்த பின்னர் மீண்டும் வேலூர் மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.



லிபியா

## அதிகாரிகளுக்கு ஐ.எஸ் தண்டனை

லிபியா நாட்டில் நீண்ட கால அதிபராக இருந்த முகமது கடாபி 2011 ஆம் ஆண்டு புரட்சிப் படையினரால் கொல்லப்பட்டார்.



அதைத்தொடர்ந்து அங்கு உள்நாட்டுக் குழப்பம் நிலவி வருகிறது.

இதனால் சில பகுதி களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். லிபியாவின் மேற்கு பகுதியில் உள்ள சபரதா நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இந்நிலையில், சபரதா நகரை மீட்க இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தியது.

இரு தரப்பு மோதல்களின் போது 12 இராணுவ அதிகாரிகளின் தலைகளைத் துண்டித்த தீவிரவாதிகள், சடலங்களை வீதியில் வீசியுள்ளனர். இராணுவத்திற்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் தொடர்ந்தும் மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியா

## ஆயுத தடை விதிக்கப்பட வேண்டும்

### ஐரோப்பா நாடாளுமன்றம் கோரிக்கை

சவுதி அரேபியா, ஜேர்மனில் மேற்கொள்ளும் வான் தாக்குதல்கள் காரணமாக பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்படுவதாக ஐரோப்பா நாடாளுமன்றம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதனை அடுத்து ஐரோப்பா நாடாளுமன்றம் அந்நாட்டிற்கு எதிராக ஆயுத தடை விதிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிய வருகின்றது. அத்துடன் 7 லட்சத்து 50 ஆயிரம் ஐரோப்பிய மக்கள் கையெழுத்திட்ட மனுவொன்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சவுதி அரேபியாவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்வதிலிருந்து விலக வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.



இதுவரை 6,000 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளதாகவும் இவர்களில் பெரும்பாலானோர் பொது மக்கள் என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.


இதனையடுத்து, சவுதி அரேபியாவிற்கு எதிராக ஆயுத தடை விதிக்குமாறு கோரி யோசனை ஒன்று நிறைவேற்றிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

## உயர்த்தப்பட்டது பாதுகாப்புச் செலவுகள்

அவுஸ்திரேலியா பாதுகாப்புச் செலவுகளை உயர்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த பத்து ஆண்டுகளுக்கான பாதுகாப்புச் செலவு 21.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. நீர்மூழ்கி கப்பல்களுக்காக அதிகளவான பணம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதுடன் கடற்படைக் கப்பல்கள், தாக்குதல் விமானங்கள் போன்றனவும் கொள்வனவு செய்யப்பட உள்ளது.

2021ம் ஆண்டளவில் அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தியில் 2 வீதம் பாதுகாப்புச் செலவிற்காக ஒதுக்கப்பட உள்ளது. அவுஸ்திரேலியாவின் இந்த நகர்வு குறித்து பிராந்திய வலய நாடுகள் அவதானம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நேபாளம்

## ஒரு வாரத்தில் இரு விமான விபத்துக்கள்

தாரா எயார் நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் 20 பயணிகள் மற்றும் 3 விமானிகளுடன் நேபாளத்தில் உள்ள பொஹாராவில் இருந்து ஜாம்சன் என்ற இடத்தை நோக்கி புறப்பட்டுச் சென்று காணாமற் போயிருந்த விமானம் விபத்திற்கு ள்ளாகி, அதிலிருந்த 23 பேரும் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த விமானம் சிறிது நேரத்திலேயே விமான நிலையத்துடனான தொடர்பை இழந்துள்ளது. மேலும், விமானத்தின் உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நேபாள விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் தகவல் தெரிவித்துள்ளார்.

இது நடந்து சில தினங்கள் கழிந்த நிலையில் நேற்று 11 பேருடன் நேபாளத்திலிருந்து பயணித்த சிறிய ரக விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக மலைப்பகுதி அருகே விவசாய நிலத்தில் தரையிறங்க முயற்சித்ததாகவும் அப்போதே



விபத்துக்குள்ளானதாகவும் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

சுவிஸ்

## சட்டமூலத்திற்கான வாக்கெடுப்பு நாளை

குற்றங்களை மேற்கொண்டதாக உறுதிப்படுத்தும் வெளிநாட்டுப் பிரஜைகளை, சுவிற்ஸர்லாந்திலிருந்து வெளியேற்றும் சர்ச்சைக்குரிய பொதுஜன வாக்கெடுப்பில், சுவிற்ஸர்லாந்துப் பிரஜைகள், நாளை ஞாயிற்றுக்கிழமையன்று வாக்களிக்கவுள்ளனர்.

சுவிஸின் பெரும்பான்மைக் கட்சியான வலதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட சுவிஸ் மக்கள் கட்சி, சர்ச்சைக்குரிய இந்த வாக்கெடுப்புக்கான நடவடிக்கைகளை முழுமூச்சாக மேற்கொண்டிருந்தது. இந்தச் சட்டத்துக்கு ஆதரவு கிடைத்து, அது நிறைவேற்றப்படுமாயின், சிறிய குற்றங்களைக் கூட மேற்கொள்வோர், சுவிஸிலிருந்து வெளியேற்றப்படும் ஆபத்துக் காணப்படுகிறது.

இந்தச் சட்டத்துக்கு, அரசாங்கத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் பெரிய அரசியல் கட்சிகளிடமிருந்தும் மனித உரிமைகள் ஆர்வலர்களிடமிருந்தும், கடுமையான எதிர்ப்பு உருவாகியுள்ளது. அடிப்படை உரிமைகளை இது பாதிக்குமென, எதிர்ப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.




## ஸ்தாபகர்களுக்கு கொலை மிரட்டல்

ஐ.எஸ் தீவிரவாதிகளினதும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்த ஒரு இலட்சத்து இருபத்தை யாயிரம் பேஸ்புக் மற்றும் டுவிட்டர் கணக்குகள் முடக்கப் பட்டதை எதிர்த்து தீவிரவாதிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக தெரிய வருகின்றது.

பேஸ்புக் நிறுவனர் மார்க் ஷகர்பேர்க் மற்றும் டுவிட்டரில் தலைமை செயல்திகாரி ஜெக் டோர்சி ஆகியோருக்கே ஐ.எஸ் தீவிரவாதி களினால் காணொளி மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. ஆதரவாளர்களின் தீச்சுவாலை எனும் தலைப்பிலேயே அக்காணொளி வெளியிடப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முரசு

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

விந்தியா சாகரன்
முகப்பக்கத்திலிருந்து....

அடுத்து வரும் வாரங்களில்
.............

# சீக்கா வைரஸ் (Zika Virus)

வைத்திய கலாநிதி திருமதி ஜமுனா சிவசங்கரன்
மருத்துவமனை திட்டமிடல் வைத்திய அதிகாரியும்
இனவிருத்திச் சுகாதார வைத்திய அதிகாரியும்
பொது மருத்துவனை, திருகோணமலை

**நோய்ப்பரம்பல்**

உண்மையில் சீக்கா வைரஸ் காய்ச்சல் என்பது தற்போது புதிதாகத் தோன்றிய ஒரு வியாதியல்ல. இது முதன்முதலாக 1947ம் ஆண்டில் உகண்டா நாட்டில் குரங்குகளில் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் 1952ம் ஆண்டில் உகண்டா மற்றும் தன்சானியா நாடுகளில் மனிதரில் பரவுவது அறியப்பட்டது.

அதன்பின்னர், ஆபிரிக்க, அமெரிக்க, ஆசியப் பசுபிக் பிராந்தியங்களில் அவ்வப்போது பெருமெடுப்பில் திடீர் பரவலை (Out-Break) ஏற்படுத்தி யதும் பதிவாகியுள்ளது.


சீக்கா வைரஸ் காய்ச்சல் (Zika Virus) பிரதானமாக நுளம்புகள் மூலம் பரவும் ஒரு நோயாகும். இது டெங்கு (Dengue) மஞ்சட் காய்ச்சல் (Yellow fever) போன்றவற்றைப் பரப்புவதும், பகலில் குற்றுவதுமான ஏடிஸ் (Aedes) வகை நுளம்புகளின் மூலம் காவப்பட்டுப் பரப்பப்படுகின்றது. எனினும் இரத்தப் பரிமாற்றம் மற்றும் நோயுற்றவர்களுடன் உடலுறவு கொள்வதன் மூலமும் இந்நோய் பரவியதற்கான சான்றுகள் பல நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளன.

**நோய் அறிகுறிகள்**

சீக்கா வைரஸ் காய்ச்சல் (ணுமைய ஏசைரள) தொற்றுக்கு ஆளான 05 பேரில் ஒருவருக்கே நோய் அறிகுறிகள் தென்படுவதாக ஆய்வுகள் சுட்டுகின்றன. நோயரும்புகாலம் 2-6 நாட்களாக இருக்கின்ற போதும் இதுவரை துல்லியமாக வரையறுக்கப்படவில்லை. சீக்கா வைரஸ் காய்ச்சலின் நோயறிகுறிகள் பெரும்பாலும் டெங்கு, சிக்குன்கூனியா போன்றவற்றின் அறிகுறிகளை ஒத்திருக்கின்றன.

காய்ச்சல், தோலில் ஏற்படும் செறிவு (Rash), மூட்டுக்களில் வலி, கண்களில் எரிவு அல்லது சிவப்பு நிறமடைதல் (Conjunctivitis) என்பன பொதுவான அறிகுறிகளாகும். இவைகளோடு உடல் நோவு மற்றும் தலையிடி என்பனவும் ஏற்படலாம். பொதுவாகவே நோயறிகுறிகள் 2-7 நாட்கள் வரை தென்படலாம். உண்மையில் இந்நோயறிகுறிகள் பாரதூரமற்றவையாகும். இறப்பு விகிதம் மிகமிகக் குறைவாகும். இந்நோயறிகுறிகள் பாரதூரமாகக் காணப்படின் வைத்திய சாலையை நாடவேண்டும்.

சீக்கா வைரஸ் காய்ச்சல் (Zika Virus) உயிராபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு பெரிய நோயாக இல்லாமலிருப்பினும்,




இது பற்றி இன்று உலகம் பரபரப்பாகப் பேசுவதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கத்தான் செய்கின்றது. தென்னமெரிக்க நாடுகளான தகிற்றி தீவுகள் மற்றும் பிரேசிலில் 2013ம் 2015ம் ஆண்டுகளில் சீக்கா வைரஸ் காய்ச்சல் வெகுவாகப் பரவியிருந்தது.

இதன்பின்னர் இந்நோயினால் பாதிப்புற்ற கர்ப்பிணித் தாய்மார்கள் ஈன்ற குழந்தைகளின் தலைகள் அளவில் சிறியவையாக (Microcephaly) இருக்கின்றன. எனினும், Zika virus இற்கும் Microcephaly இற்குமான தெளிவான தொடர்புகள் இதுவரை ஆதாரப் படுத்தப்படவில்லை

தொடரும்

# நிகழ்வுகள்

தம்பலகாம நிருபர்

## சிறுவர் சந்தை

முள்ளிப்பொத்தானை கோட்டக் கல்வி பிரிவுக்கு உட்பட்ட ஆறு பாலர் பாடசாலைகள் பங்கு பற்றும் சிறுவர் சந்தை முள்ளிப்பொத்தானை தம்பலகாமம், கிண்ணியா பாலர் பாடசாலைகளுக்குமான இணைப்பாளர் எம் சமிம் ஆசிரியர் தலைமையில் 21-02-2016 அன்று முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் பொது மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதீயாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹருப், விசேட அதிதீயாக இலங்கை நுகர்வோர் அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான Dr ஹில்மி சட்டத்தரணி அவர்களும் கலந்து சிறப்பித்ததுடன் பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களும் பங்கு பற்றியிருந்தனர்.




தமிழ் மொழி வாழ்த்துப்பா இசைத்த போது





## "ஓய்வு" நூல் வெளியீடு

தன்யா



25.02.2016 அன்று மூதூர் சேனையூரில் அமைந்துள்ள சேனையூர் மத்திய கல்லூரியின் அதிபரான திரு.இரத்தினசிங்கம் அவர்களினால் □ஓய்வு□ எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

பிரதம அதிதிகளின் வரவேற்பினை தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரை திருமதி.இ.இராமலிங்கம் (ஆசிரியை) அவர்களினால் ஆற்றப்பட்டது. பின்னர் பிரதி அதிபர் திரு.செ.சிறீதரன் அவர்களினால் தலைமை உரை நிகழ்த்தப்பட்டது. பின்னர் விழா முதல்வரான சேனையூர் இரத்தினா அவர்களினால் நூல்கள் அதிதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் கௌரவ கவிமணி கௌரிதாசன் அவர்களினால் நூல் குறித்த விமர்சனம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து நூலின் அட்டைப் படம் குறித்த விளக்கத்தினை மாயன் என அழைக்கப்படும் மலைமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு.இரா.ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களால் வழங்கினார்கள். பின்னர் ஏற்புரையும் அதனைத் தொடர்ந்து நன்றியுரையும் இடம்பெற்றன.

கடந்த 10 வருடங்களாக சேனையூர் மத்திய கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய சேனையூர் இரத்தினா அவர்கள் ஒரு இலக்கிய வாதியாகவும் ச[illegible] பொறுப்பாளராகவும் கடமையாற்றி வந்துள்ளார். அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமையுடன் ஓய்விற்குச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


அதிதிகளை வரவேற்றல்


வாழ்த்திப் பாடல்




பாடசாலையின் பழைய மாணவர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## "கற்பகமே கலங்காதே"

சேனையூர் ரெத்தின சிங்கம் சேவையில் அவரோ தங்கம்
தானைத் தலைவனாய் வாழ்ந்து தகைமையுறு பணி செய்தார்
மத்திய கல்லூரித் தலைவன் மாசறு பணியில் திலகன்
சித்தம் கவரும் குரலோன் சீர்பெறு நாடகத்திறலோன்

பொன்னாவரை தந்த கவிஞன் புகழும் அவரை ஊரோ
இன்னாதவை வெறுக்கும் தயோன் இரக்கமுடைய இனியோன்
படிக்கும் ஆர்வம் உடையோன் பாடலியற்றும் வல்லோன்
நடிக்கும் ஆற்றல் மிக்கான் நாடகம் எழுதும் கலைஞன்

மட்டுநகர் சிவானந்தாவில் மாறாச்சீலம் கற்றோன்
தொட்டபணிசீராய் முடிக்கும் உறுதி கொண்டோன்
அனுபவித்த விடயத்தை அழகாய் நூலில் நவில்வோன்
பனுவல் பலவும் கற்று பண்பாடு என்றும் காப்பான்

பதவி ஓய்வு பெறுவோன் படைப்பில் ஓயா உரவோன்
உதவி நல்கும் உளத்தோன் உயர்வு பெறுவான் உலகில்
வாழும் சமூகம் என்றும் வாயார அவரை வாழ்த்தும்
நாளும் ஓயாச்சூரியனாய் நானிலம் போற்றவாழ்க

ஓய்வு நூலும் வாழ்க ஓர்மம் என்றும் வளர்க
நோயும் நீங்கி நாளும் நூறு ஆண்டு வாழ்க!

அன்புத் தங்கை
-- தம்பிலுவில் ஜெகா--

## ஓய்வுதான்!

பாட்டுப் பாட்டாய் எழுதினேன்
பல இதழ்க்கும் அனுப்பினேன்!
பாட்டம் போனால் துளி வரும்!
பாடல் மீதி கூடையோ?

மலைமுரசுக் கிழமைத்தாள்
மட்டும் தொடர்ந்து போட்டதேன்?
கலையில் பற்றிருந்ததால்
கவிதை யார்வம் கொண்டதால்!

எழுதிக்களைத்தேன் - அகவையும்
"எக்கச் செக்கம்" ஆனதாம்!
பழுது கண்ணின் பார்வையும்
படுக்க வேண்டும் - "அறிதுயில்"

புதியவர்கள் ஆர்வமாய்ப்
போகும் போது பழையவர்
அதை இருந்து பாத்திடும்
ஆசையால் சற்றோய்வுதான்!




## முரசே நீ முழங்கு



அருகில் கவிழ்ந்திருக்கும்
இருள் -
உற்றுப் பார்க்கிறேன்
நான் - யாரோ
உறைகிறார் அவ்விருளில் - -

இன்னும் உற்று
உற்றுப் பார்க்க
83ல் தெருவில்
கிழித்தெறியப்பட்ட
அக் குழந்தை...

இருளின் நிறங்
கொண்டு என்னுடனேயே
உறையும்...

அறிவு ஒளி பெற
இருளின் நிறம்
மறைந்தது..
இறந்த அக்
குழந்தையின் பின்னே
ஆயிரக் கணக்கில்
எம்மவர் . .

இருளின் நிறங்
கொண்டு உறைவர்
என்னுடனே!

கொலையும்
பசியும் - உயிர்
கொடையும்

வீரச் சாவும் ..
எரிந்தும் - யாரும்
அறியாமல் மண்ணிறம்
புதைந்தும்
வெடித்துக் காற்றாகியும்
வெள்ளை முள்ளி
வாய்க்காலிற்
பலியாகியும் . .

எம்மவர் அருவமாய்
என்னுடன் உறைவர் . .
எம்மவரின் அழிவின் - பின்னும்
என் வாழ்வு
தொடர்வது ஏன்?

என்றோர் வினா எழ ... எழ ..
அறிவொளி மங்கிக்
காற்றில் அலையும் ....
இருள் மீள
என்னைச் சூழ ... எஞ்சி
நிற்குமக் கேள்வி - என்
வாழ்வு தொடர்வது ஏன்?

இன்றோ - ஏழைச்
சத்துணவைத் தின்றவனும்
இணக்கமில்லாப்
பெண்ணைத் தொட்டவனும்
ஆசான் என்றென்முன் . . .
அவர்க்காய்ப் பரிந்தபடி - மற்றும்
ஆயிரம் பேர் அவர்பின் . .

இருளில் என்னோடு
உறைபவருக்கு - நான்
என்ன பதில்
சொல்வேன்

இருளில் உறைவோரே!
என் உயிர்த்துடிப்புள்ளவரை
சரியாதென் எழுத்தாணி
சரியானதையே எழுதும் . . .

முரசே - நீ
முழங்கு!

மாயவன்

## வலைப்பின்னல் வாழ்வு

உடன்பிறந்தால் மட்டும்
உறவுகள் என்றல்ல
உள்ளத்தின் நட்பு
என்றுமே நிலைத்திடும்
இன்ப உணர்வுகளே
மானிடத்தின் மர்மப் படைப்பு
சந்தர்ப்பங்கள் - சில
உறவுகளாகின்றன
காரணமில்லாமலே
அன்பின் பிணைப்பு
ஆழமாகப் பதிந்து
ஆற்றல்களாகிவிடும்
உள்ளங்கள் மட்டும்
உறவாடும் மர்மம்
தூய அன்பின்
உயிர்ப்பின் நிலைப்பு
அபார சக்தி இதுவே
மாயப்பிணைப்பு
வலைப்பின்னல் (உறவு) முறைமை
விஞ்ஞானம் சொன்னது
வாழ்வின் பிணைப்பு
ஆண்டவன் தந்தது
நம்பிக்கை வைத்தால்
நாமதை உணரலாம்
பிணைப்புக்களும்
பிறப்பினால் வந்ததே
யாரும் உணரா
மர்ம ஞானம்
வாழ்வினில் உணர்ந்தால்
வளமோடு வாழலாம்
இனமொழி பேதம்
இதற்கு இல்லையே
அறிந்தால்
உண்மைத் தத்துவம்
உணர்வோம்.

நூல் : பொன்னாவரை
ஆசிரியர் : சேனையூர் இரத்தினா

## மனிதன் மனிதனாக வாழ அவசியமானவை

அறிவு முதிர்ச்சி அவசியம்
அன்பு கொள்ளல் அவசியம்:
ஆசை அளவோடு அவசியம்
ஆத்திரம் தவிர்த்தல் அவசியம்:

இயல்பு வாழ்க்கை வாழ்வது அவசியம்
இறைவனைத் தொழுது வாழ்தல் அவசியம்:
ஈனம் வராமலிருப்பது அவசியம்
ஈதலின்பம் இல்வாழ்வில் அவசியம்:

உழைத்துண்டு வாழ்தல் அவசியம்
உரிமை பெற்றுயர்வது அவசியம்:
ஊழலை தவிர்த்தல் அவசியம்
ஊனமுள்ளோர்க்கு உதவுதல் அவசியம்:

எண்ணெயும் எழுத்தையும் கற்பது அவசியம்
எதற்கும் அஞ்சாது வாழ்வது அவசியம்:
ஏமாற்றி வாழ்வதை ஏற்காமை அவசியம்
ஏமாறாமல் கவனமாய் இருப்பது அவசியம்:
ஐக்கியப்பட்டு வாழ்வது அவசியம்:
ஐங்குரவரை மதிப்பது அவசியம்
ஒற்றுமையாக வாழ்வது அவசியம்
ஒழுக்கமும் உண்மையும் மிகமிக அவசியம்:

ஓகாரவுரு வழிபாடு அவசியம்
ஓதி உணர்வது அவசியம்
ஔவித்தல் கொள்ளாமை அவசியம்
ஔவையார் பாடல்கள் படிப்பது அவசியம்

கவிக்குயிலன்.
சேனையூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவச் சதிக்கு அஞ்சுகின்றனரா ரணில் - மைத்ரி

மூலம் - உபுல் ஜோசப் பெனாண்டோ



யாழ்பாணக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சாஜி கலகே கடந்த வாரம் திடீரென இராணுவத் தலைமையகத்திற்கு இடமாற்றப் பட்டிருந்தார். அவ்விடமாற்றத்திற்குக் காரணம் அவர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் கடும் வாயத்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்ததே.

அப்படியென்ன பிரச்சனை கட்டளைத் தளபதிக்கு வெளிவிவகார அமைச்சருடன்?

ஐக்கிய நாடகள் சபையின் மனித உரிமைச் சபையின் அமர்வுகள் எதிர் வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நிலையில் ஸ்ரீலங்கா அரசின் தூதுக் குழுவின் அங்கத்தவர்களைத் தேர்வு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அக்குழுவில் சரேட்ட இராணுவ அதிகாரிகள் இருவர் உள்வாங்கப்படவிருந்தனர், எனினும் இக்குழுவிற்குத் தலைமையேற்றுச் செல்லவுள்ள வெளிவிவகார அமைச்சர் இராணுவத்தினரை உள்வாங்க விரும்பவில்லை என்பதுடன் அந்த இரண்டு சிரேட்ட இராணுவ அதிகாரிகளையும் தூதுக்குழுவின் பட்டியலில் இணைக்கவும் மறுத்துள்ளார்.

இவ்வாறு அவர் மறுத்ததைத் தொடர்ந்தே கட்டளைத் தளபதிக்கும் அமைச்சருக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கம் நிகழ்ந்துள்ளது.

கட்டளைத்தளபதி சாஜி கலகே முன்னாள் ஸ்ரீலங்காவின் சனாதிபதி மஹிந்த ராசபக்சவின் பாதுகாப்புப் பிரவிற்குத் தலைவராகச் செயற்பட்டவர். இரண்டாவது சனாதிபதி ஆட்சிக் காலத்தை வென்ற மஹிந்த உடனடியாகவே தனது எதிர்த் தரப்புப் போட்டியாளரான சரத்பொன்சேகாவைக் கைது செய்து சிறையில் அடைத்தார். அடுத்து சாஜி கலகேவை பதவியுயர்த்தினார்.

மஹிந்த ஆதரவு அணியினர் இராணுவத்திற்குள் இருப்பது மிகச் சாதாரணமான விடயமே. அவர்கள் மைத்ரி-ரணில் கூட்டை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. இந்நிலையில் ஜெனீவாவிலும் வெற்றியை இக்கூட்டு சுவைக்கத்தயாராகி வருவதால் போட்டி சற்றுக் கடுமையாகத்தான் இருக்கும்.

இந்நிலையில் மஹிந்த ஆதரவு அணியால் இராணுவச் சதியொன்று எக்கணத்திலும் நிகழலாம் என்ற அச்சம் மைத்ரி-ரணில் கூட்டுக்கு எப்போதுமே உள்ளது போலவே உள்ளது.

ஏனெனில் 2012ம் ஆண்டு இவ்வாறானதொரு இராணுவ-அரசியல் சதியில் சிக்குண்டுதான் ரணில் தலைமையிலான அரசாங்கத்தை அன்றைய சனாதிபதி சந்திரிகா அம்மையார் கலைத்திருந்தார்.

அவ்விராணுவ-அரசியல் கூட்டுச் சதிக்குப் பின்புலமாக திருகோணமகைக் கடற்படைத்தளத்தின் பாதுகாப்பே மிக முக்கிய காரணியாக இருந்திருக்கின்றது.

அன்றைய காலத்தில் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் கிழக்குப் பிராந்தியக் கட்டளைத் தளபதியாக வசந்த கரன்னகொட செயற்பட்டிருந்தார்.

அவர் அன்றைய தினத்தில் திருகோணமலைக் கடற்படைத்தளத்தின் பாதுகாப்பு கடும் நெருகடிக்கு உள்ளாகியிருப்பதான அற்றைய தினத்தில் எதிர்கட்சித்தலைவராக இருந்த மஷிந்த ராசபக்சவிற்குத் தெரிவித்திருந்நதார்.

இத்தகவல் அம்மையார் சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்களுக்குப் பரிமாறப்பட்டது. அத்தகவலின் அடிப்படையில் முதற்கட்ட நடவடிககைகள் முன்னெடுக்கப்பட்டன.

அம்முதற்கட்ட நடவடிக்கையின் பயனாக அன்று பிரதமமந்திரியின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பாதுகாப்பு அமைச்சு உடனடியாக சனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அவ்வமைச்சுடன் மேலும் இரண்டு அமைச்சுக்களை அத் தகவலால் இழந்தது ரணில் அரசு.

அன்றைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த தற்போதைய கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்டின் பெர்ணாண்டோ தனது புத்தகத்தில் அந்நிகழ்வுகளைப் பின்வருமாறு தொகுத்திருந்தார்.

" அரசியல் விருப்பு வெறுப்புக்கள் முன்னர் தரப்பட்டுள்ளதைப் போல வெறுமனே விடுதலைப் புலிகளுடன் மட்டும் நின்று விடவில்லை. தெற்கில் எதிரணியானது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கவே விரும்பியது. அனடறைய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராசபக்ச முக்கிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உள்நோக்கத்துடன் திருகோணமலைக் கடற்படைத் தளத்திற்குச் சென்று வரத் தனக்கிருக்கும் பேரவாவை ரணில் விக்ரமசிங்கவிடம் வெளிப்படுத்தினார். உண்மையாகச் சொல்லப்போனால் அவரது பேரவாவை நான் விரும்பவில்லை. ஏனெனில் கடற்படைத்தளத்தின் நிலை தொடர்பான விடயங்களை அரசியல் நோக்குடன் திரிபுபடுத்தி வெளியிடக் கூடிய ஆற்றல் மிக்க ஒருவராகவே அன்று நான் மஹிந்தவைப் பாரத்தேன்.

ஆனால் அவரது விருப்பத்தை நிறைவு செய்யவே ரணில் விரும்பினார். மஹிந்தவிற்கு ஒரு உலங்குவானூர்தியை ஏற்பாடு செய்து கொடுக்குமாறு எனக்கு ரணில் கட்டளையிட்டார். ரணில் மிகவும் நல்லமனமுள்ளவர், மிகச் சிறந்த நுண்ணறிவுடையர். என்றாலும் கூட இந்த விடயத்தில் அவர் இவ்வாறான முடிவொன்றையே எடுத்திருப்பதற்கு அவரிடம் சரியான காரணங்கள் சில இருந்திருக்கலாம். ஆனாலும் நான் எனது சந்தேகத்தை ரணிலிடம் வெளியிடாமலில்லை. எனத சந்தேகத்தை நான் அவரிடம் தெரிவித்த போதும் அவர் மஹிந்தவின் பயணம் எரியும் நெருப்பில் எண்ணையை ஊற்றுவதற்குச் சமமானது என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. நானும் அவரை மேலும் சங்கடப்படுத்த விரும்பவில்லை. ஆனால் நான் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். அதாவது மஹிந்தவுடன் நானும் கடற்படைத் தளத்திற்குச் செல்வேன் என்பதே அக் கோரிக்கை. அதனை ரணில் ஏற்றுக்கொண்டார். அம்முடிவை நான் மஹிந்தவிற்குத் தெரிவித்தேன். அவர் நீங்கள் ஏன் அவ்வளவு கஸ்டப்படுகின்றீர்கள் எனக் கேட்டார். அதற்கு தந்திரத்துடன் நான் சொன்ன பதில் நான் உங்களுக்கு உதவி செய்யவும் எனது அமைச்சு தொடர்பாக அங்கு ஏதேனும் விடயங்கள் தேவையெனில் என்னைவிட வேறுயார் உங்களுக்கு மிகத் தெளிவாக விளங்கப்படுத்த முடியும் என்றும் கூறினேன். அதனை மஹிந்த அசூசையுடன் ஏற்றுக்கொண்டார். எனினும் நான் திருகோணமலைக்குப் பயணித்தேன்.

மிகச் சிறந்த அர்ப்பணிப்பு மிக்க கடற்படை அதிகாரிணான வசந்த கரன்னகொடவுடன் நாமிருவரும் அன்று கலந்துரையாடியிருந்தோம். கரன்னகொட மண்ிராசன்குளத்தில் இருந்த உருவாகியிருக்கும் ஆபத்தை வெளிப்படுத்தினார். எனினும் அவ்விடயத்தை அவர் அதற்கு முன்னர் எப்போதுமே பாதுகாப்பு அமைச்சிற்கு முழுமையாகத் தெரிவித்திருக்காததால் நான் அமைதியாக இருந்தேன்.

தன்னுடன் நெருக்கமாக இருந்த முப்படையனரின் பலத்தின் பின்புலத்திலேயே ரணிலின் அரசை சந்திரிகா அம்மையார் கலைத்தார். அக்கலைப்பு ஒன்றும் மிகக் கடினமானதாக இருக்கவில்லை.

ஏனெனில் அப்போது ரணில் மேற்கொண்டிருந்த சமாதான உடன்படிக்கையை எதிர்த்த முப்படையினரே சந்திரிக்காவிற்கு ஆதரவாக இருந்தனர். விடுதலைப் புலிகள் பலத்துடன் இருந்த அக்காலத்தில் படையினர் தமது தளங்கள் பலவற்றை விடுதலைப் புலிகளிடம் இழந்திருந்தனர். தற்காலிக ஓய்வொன்றே படையினரின் கட்டமைப்புக்களைப் பலப்படுத்தும் என்பதன் அடிப்படையில் நோர்வேயிடம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சந்திரிகாவே அப்போது கோரியிருந்தார். போர் நிறுத்த உடன்படிக்கையால் படையினர் தமது பலத்தை மீளமைத்துக்கொண்டனர் என்ற உண்மையை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது 2003ம் ஆண்டின் மாவீரர் தின உரையிலும் தெரிவித்திருந்தார். ஆனால் இறுதியில் அந்த உடன்பாட்டை உருவாக்கியதே தவறு என்ற அடிப்படையில் ரணிலின் அரசு கலைக்கப்பட்டது" எனத் ஒஸ்டின் பெர்ணாண்டோ தனது புத்தகத்தில் தெரிவித்திருந்தார்.

2015ல் மைத்திரி-ரணில் கூட்டு அரசைப் பொறுப்பேற்றுக்கொண்ட போது ஸ்ரீலங்காவின் படைகள் வெட்கத்தனமான குற்றங்களுக்காக சர்வதேச குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டிருந்தன. மஹிந்த அரசின் மேற்குலக எதிர்ப்புப் பண்புக்கான விலையினைப் படையினரே செலுத்த வேண்டியவர்களாக இருந்தனர். படையிலிருந்து இளைப்பாறியவர்களைக் கூட ராசதந்திரப் பதவிகளில் அமர்த்த முடியாத இக்கட்டான சூழல் இருந்தது. ஸ்ரீலங்காப் படைகளுக்குப் பயிற்சியளிக்கக் கூட பலநாடுகள் மறுத்திருந்தன. இவற்றையெல்லாம் எதிர்கொண்டு ஸ்ரீலங்காப் படையினரின் நன்மதிப்பை சர்வதேச அரங்கில் நிலைநிறுத்தப்பகீரதப் பிரயத்தனப் படும் மைத்ரி-ரணில் கூட்டரசின் செயற்பாடுகள் தொடர்கின்ற வேளை மஹிந்த தனக்காதரவான படையினர் இடையே கிளர்ச்சியை ஏற்படுத்த முயல்வதாகவே தெரிகின்றது.

இவ் உணர்திறன் மிக்க மஹிந்தவின் செயற்பாடுகளின் மீது மைத்ரி ரணில் கூட்டு போதிய கவனம் செலுத்தாது விடும் பட்சத்தில் தற்போதைய கூட்டும் 2004ம் ஆண்டில் ரணில் அரசாங்கம் எதிர்கொண்ட அதே விதியை எதிர்கொள்ளவேண்டி வரலாம்.

மொழிமாற்றமும் – தொகுப்பும்

**-மாயன்-**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 93

# பக்கச்சார்பும் நடுவுநிலையும்

சமூகத்தில் 'பக்கசார்பு' மட்டும் இல்லை என்றால் இந்த உலகம் சுவர்க்கபுரிக்கு இணையானதாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை!

ஆனால் மனிதன் தினமும் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் பக்கசார்பு காரணமாக உண்டான வையேயாகும். குடிமகன் முதல் ஆட்சியை கையில் எடுப்பவர் வரை பக்க சார்பாக நடப்பதையே நாம் நாளாந்தம் காண்கின்றோம். எம்மை சார்ந்தவர்கள் உறவினர்களாகட்டும், நண்பர்களாகட்டும், தொழிலால் இணைந்தவர்களாகட்டும் பக்கசார்பு இல்லாதவர்களை விரல் விட்டு மட்டுமே எண்ண முடியும். எம்மை சார்ந்தவர்கள் எமக்கு பக்க துணையாக அல்லவாக இருக்க வேண்டும். அவர்கள் ஏன் அப்படி நடந்து கொள்வதில்லை என்று ஆராய்ந்தால் அதற்கான பதில் அவர்களுக்கு எம்மேலான போட்டியும் பொறாமையும் தான்! நாம் விழிப்பாக இல்லாமல் சற்று அயர்ந்து விட்டால் தொலைந்தோம்!

பக்கசார்பு என்ற விடயம் மனிதர்களிடம் இயற்கையிலேயே அமைந்ததுதான். ஒரு தாயை எடுத்தால் அவள் பசியால் துடிக்கும் தனது குழந்தைக்கு மட்டுமே பால் ஊட்டுகின்றாள்.. அன்பு பாசம் ஆகிய உணர்வுகள் சகோதரர்களிடையேயும் நண்பர்களுக்கிடையேயும் ஏன் காதலர்களுக்கிடையிலும் பக்க சார்பை வெளிப்படுத்தும். அதில் தப்பில்லையேயாயினும் அதனால் மற்றவர்களுக்கு அநீதி உண்டாகக் கூடாது என்பது பிரதானம்.

எமது எதிரிகள்தான் பக்கசார்பாக நடந்து எமக்கு தீங்கிளைப்பார்கள் என்று இல்லை. எம்மை சார்ந்தவர்களே எம்மை ஓரம் கட்டிவிட்டு தமக்கு வேண்டியவர் பக்கம் சாய்ந்து நின்று காரியமாற்றிவிட்டு போய்விடுவார்கள்.!

விவாகமாகவிருக்கும் எமது வீட்டு பெண்களுக்கு நாம் பல இடங்களில் நல்ல வரனை தேடி பார்த்துக் கொண்டிருப்போம் பேச்சு வார்த்தைகள் முற்றுப்பெற்று விவாகத்துக்கு நாளும் குறிப்பிடப்பட்ட நிலையில் திடீரென நாம் பார்த்த வரனுக்கு வேறு இடத்தில் விவாகம் நடக்க ஏற்பாடாகிவிடும். காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் எம்மை சார்ந்த ஒருவர் தமக்கு வேண்டிய மற்றொரு உறவினரது பெண்ணுக்காக பக்கசார்பாக நடந்துகொண்டிருப்பார்.

ஒரு குடும்ப சண்டை, வாய்த்தர்க்கம் முற்றி அடி பிடி அளவுக்கு வளர்ந்து காவல்நிலையம் செல்லுமளவிற்கு போய்விடுகின்றது. அந்த சண்டை முற்றி உடற்காயங்கள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் நாமும் ஒத்தாசையாக இருந்திருப்போம். விசாரணை என்று வரும் போது இரு பகுதியில் ஒரு பகுதிக்கு எம்மேல் முன்னாள் கோபம் ஏதாவது இருந்திருக்கும். அவர் எமக்கெதிராக சாட்சி சொல்லப்போக நாம் சிறை செல்லவும் நேரிடலாம் அல்லவா?

இனி, எமது நாட்டில் பணம் பாதாளம் மட்டுமல்ல அதற்கப்பாலும் போகும். எந்த படுபாதக செயலையும் பணத்தால் மூடி மறைக்கலாம் என்ற நம்பிக்கை குற்றவாளிகளுக்கு இருக்கின்றது. அதே போன்று பக்க சார்பாக நடக்க ஒத்துக்கொள்வதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்று அதிகாரிகள் நம்புகின்றார்கள்.

பொய்ச் சாட்சிகள் பணத்திற்காக எதையும் கூற தயாராக இருக்கின்றார்கள். நீதவானின் நியாயமான வழக்கு விசாரணைகளுக்கு அவர்கள் பெரும் குந்தகமாக அமைகின்றார்கள். குற்ற செயலை யார் செய்தார்கள்? எங்கு? எப்படி செய்தார்கள் என்பதை சந்தேகமற உறுதி செய்ய முடிவதில்லை. எந்த சந்தேகமும் குற்றவாளிக்கு சாதகமாகவே பார்க்கப்பட வேண்டும் என்று சட்டம் சொல்கின்றது. இந் நிலையில் உண்மையான குற்றவாளியே விடுவிக்கப்படும் நிலை உண்டாகின்றது. பாருங்கள் .... அநாவசிய பக்க சார்புகள் நாட்டில் குற்ற செயல்கள் தொடர்வதற்கு எப்படி உதவியாகின்றதென்று!

இனி போட்டிக்கும் பொறாமைக்கும் அப்பால் பக்கசார்பின் உச்சகட்டமாக துவேஷம் பெரிய அளவில் தலைவிரித்தாடுகின்றது. அதனை நாம் எமது நாளாந்த வாழ்வில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். துவேஷம், இன துவேஷசம், மத துவேஷம், சாதி துவேஷம் என பலதரப்பட்டு விரிந்து செல்கின்றது.

அரசியல் செய்பவர்கள் தம்மை பலப்படுத்திக்கொள்வதற்காக பயன்படுத்தும் ஆயுதம் தான் இனத்துவேஷம். பாராளுமன்ற ஆட்சியில் வாக்கு பலம் மிகவும் முக்கியமாக உள்ளது. அதனை ஈட்டிக்கொள்ள வேண்டுமென்றால், இனங்களுக்கு மத்தியில் எவர் பெரும்பான்மையினராக உள்ளனரோ அவர்களது சகாயத்தை எந்த வழியிலேனும் பெற்றுக் கொள்ள வேண்டியதுதான்! எந்த ஒரு நாட்டின் பெரும்பான்மை இனத்தவரும் சரி அவர்களுக்கு வேண்டியது தமது பொருளாதார சமூக உயர்ச்சியே. அரச பதவிகள். பெரும் தொழிற்துறைகள் எல்லாமே அவர்களது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இனி சிறுபான்மையினத்தவருக்கு நாட்டில் மொழி, மத, பொருளாதார சுதந்திரம் இருக்க கூடாது. சிறுபான்மை இனத்தவரை காலின் கீழிட்டு மிதிக்கும் அளவுக்கு அரசியல் செய்வோர் இடமளிக்க வேண்டும். நீதித்துறை நடுவு நிலைமை பேணுவதை ஏற்க முடியாது. பெரும்பான்மை இனத்த்வர் செய்யும் அநீதிகளை கண்டுகொள்ளக் கூடாது. அப்படியெல்லாம் பக்கசார்பாக நடந்தால்தான் அரசியலில் நீடிக்க முடியும்.

இந்தியா மற்றும் மேலத்தேய நாடுகளில் பல இனத்தவர்களுக்கும் பொதுவாக இந்து மதம் மற்றும் கிறிஸ்தவம் வேரூன்றி உள்ளது. அரபு நாடுகளில் முஸ்லிம்கள் தனி பலத்துடன் இருக்கின்றார்கள். ஆனால் எமது நாட்டில் பௌத்தம் பெரும்பான்மை பலத்துடன் திகழ்கின்றது. பௌத்த துறவிகள் பக்க சார்பாக இருந்து பெரும் அராஜகம் புரிகின்றார்கள். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள். அவர்களுக்கு மத சுதந்திரம் இல்லை. அவர்களது ஆலயங்கள் தகர்த்து எறியப்படுகின்றன. 'கடவுள் எமது ஆன்மாவில் குடிகொண்டிருக்கின்றான்' என்று கூறும் இந்து மதமும், 'எல்லாப்புகழும் இறைவனுக்கே என்று கூறும் இஸ்லாமும்', 'தட்டுங்கள் திறக்கப்படும் ' என்று கூறும் கிறிஸ்தவமும் பக்க சார்பு காரணமாக நசுக்கப்பட்டுள்ளன.

கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் போன்று பக்க சார்பும் சமூகத்தை பீடித்திருக்கும் ஒரு பிணி என்றே கூற வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் அவை நாட்டில் நீடிப்பதற்கு காரணம் அரசினதும் நீதிமன்றங்களினதும் பக்க சார்பு என்றுதான் கூறவேண்டும்.

சமூகத்தில் நடுவு நிலைமை என்று நிலைநிறுத்தப்படுகின்றதோ அன்றுதான் மனித குலத்திற்கு விடிவு கிட்டுவதாகும். பொய்யாமொழி புலவர் நடுவு நிலைமை மற்றும் செங்கோன்மை ஆகிய இரு அதிகாரங்களை தனது நூலில் உள்வாங்கியுள்ளார்.



(வி.என்.சந்திரகாந்தி)

அறங்களில் எல்லாம் சிறந்த அறம் நடுவுநிலைமைதான். நாம் ஏனைய எந்த அறங்கள் பற்றியும் கவலை கொள்ள வேண்டியதில்லை. நடுவுநிலைமை நின்றால் மட்டுமே போதும் மற்ற அறங்கள் எல்லாம் கைகூடும். நடுவுநிலைமை என்பது பாகுபாடற்ற வகையில் அனைவரையும் சமம் என்று எண்ணுவதாகும். எவர் ஒருவரால் அப்படி நடந்துகொள்ள இயலுமோ அவரை அனைவரும்போற்றுவர்.

நடுவுநிலைமை தவறிய ஒரு செயற்பாட்டால் நன்மைதான் உண்டாகுமென்றாலும் நாம் அதனை தவிர்ப்பதே முறையாகும். நல்ல வழியிலே பணத்தை சம்பாதிக்க வேண்டும். எமது வாழ்கையில் நன்மையும் தீமையும் மாறி மாறி வரும். அதற்கு காரணம் நாம் எமது முற்பிறப்பில் செய்த நல்வினைகளும் தீவினைகளுமாகும். ஆனால் நடுவுநிலைமை நிற்கும் ஒருவருக்கு அப்போதே புகழ் உண்டாகும். எமது மனம் நடுவுநிமையை பேண வேண்டும். அப்போது எமது சொல்லும் நீதி நியாயம் சார்ந்ததாக அமையும்.

வர்த்தகர்கள்கூட நடுவுநிலைமை நின்றே தமது தொழிலை செய்ய வேண்டும். என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

நடுவுநிலைமை என்பது அரசியலில் உள்ளோருக்கும் நீதியை நிலைநாட்ட வேண்டியவர்களுக்கும். மிக மிக இன்றியமையாததாகும். குடிமகன் ஒருவன் குற்றமிழைத்தால் அவன் குறித்து எந்த பாகுபாடும் இன்றி குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப தீர்ப்பு வழங்குவது கட்டாயமாகும். அப்படியான ஒரு நிர்வாகத்தின் கீழ் குற்றவாளிகள் தவறு செய்ய அஞ்சுவர். சான்றோர் அந்த நிர்வாகத்தை போற்றுவர்.

இன்று உலகில் என்ன நடக்கின்றது. வளர்ச்சியடைந்த அனைத்து நாடுகளுமே தமது நலன் சார்ந்தே முடிவெடுக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை கூட நடுவுநிலை நிற்பதில் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றது. அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் கூட தமது மேலாதிக்கத்தை ஐ.நா சபைமீதும் ஏனைய சிறு நாடுகள் மீதும் செலுத்துகின்றன. ஆயுதம் தான் இன்று அரசோச்சுகின்றது. உலகில் தீவிரவாதம் மேலோங்கி விட்டது. அவர்களும் ஆயுத தாரிகளாகிவிட்டனர். இப்பிரச்சனைகளை எப்படி தீர்ப்பது?

முதலில் சிறிய அளவில் ஆரம்பிப்போம். உற்றார் உறவினர், நண்பர்களுடன் நடுவு நிலைமையை பேணுவோம். அவர்கள் மீது அன்பு செலுத்துவோம். அவர்களை பாதுகாப்போம்.

வாய் ஒன்று சொல்ல மனம் ஒன்று எண்ணா விட்டாலே போதும்! இந்த உலகத்துக்கு விடிவு



## விநோதங்கள்

### 50 டிகிரியில் வெப்ப ஆறு கண்டுபிடிப்பு

அமேசான் மழைக்காடுகளுக்கு மத்தியில் ஆவி பறக்க ஒரு கொதிக்கும் ஆறு பாய்கிறது. இது சிறிய ஆறு ஆனாலும், இதற்கு, மொத்த நீர்பரப்பும் கொதிக்கும் அளவுக்கு மிகப்பெரிய மதிப்பிலான வெப்பம் பூமியிலிருந்து எப்படி கிடைக்கிறது என்பதுதான் வியப்பு. ஆனால், இந்த ஆற்றுக்கு வெகுதூரத்தில்தான் உயிரோட்டமான எரிமலைகள் உள்ளன.

இந்த ஆற்றில் குதிக்கும் தவளை போன்ற சில உயிரினங்கள் குதித்த மறுகணமே வெந்துவிடுகின்றன.

4 மைல் தூரத்திற்கு இந்த நதி ஒரு பகுதி ஆறாக கொதிக்கிறது. இதன் அகலம் 25 மீட்டர்(82 அடி) இதன் ஆழம் 6 மீட்டர்(22 அடி) இதன் வெப்பம் ஆவி பறக்கும் அளவுக்கு Tea போடலாம் என Gizmodo ஆய்வு கூறுகிறது. 100 டிகிரிக்கான கொதிப்பும் ஆவியாதலும் இருக்கிறது. விலங்குகள் மட்டுமல்ல நாம் தவறிவிழுந்தாலும் வெந்து இறப்பது உறுதி என கூறுகிறார்.



### கைதிக்கு கிடைத்த விநோத தீர்ப்பு

கனடாவின் கியூபெக் பகுதியை பிறப்பிடமாக கொண்ட 24 வயதான பெண் சிறு வயதிலேயே திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்தவர். கடந்த 2014 ஆம் ஆண்டு கனேடிய காவல்துறை இவரை கைது செய்யும் போது, வீடு புகுந்து இவர் கொள்ளை நடத்தியதின் எண்ணிக்கை 39 என வெளிப்படுத்தினர். அதன் மூலம் 41,667 பவுண்ட் பணம் மற்றும் விலைமதிப்பற்ற பொருட்களையும் சூறையாடியுள்ளனர்.

இதனிடையே இவரது பேஸ் புக் புகைப்படங்களை காணக்கிடைத்த ஒரு விளம்பர நிறுவனம் இவரை தங்களது விளம்பர படங்களில் நடிக்க ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. தற்போது வழக்கு விசாரணை முடிவுக்கு வந்த நிலையில், இவருக்கு 90 நாட்கள் தண்டனை விதித்ததுடன் வார இறுதி நாட்களில் மட்டும் சிறை தண்டனை அனுபவித்தால் போதுமானது எனவும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

### 16 வயதிலேயே இப்படி ஒரு சந்தர்ப்பமா!!

ரஷ்யாவில் கணனி விளையாட்டில் வெற்றி பெற்ற பள்ளிச் சிறுவனுக்கு ரஷ்யாவின் ஆபாச பட நடிகையான Ekaterina Makarova என்பவருடன் மொராக்கோ ஹொட்டலில் ஒரு மாதம் தங்குவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து அச்சிறுவன் நான் ஆபாசபட நடிகையை பார்ப்பதற்கு முன்னர் எனக்குள் மிகுந்த எதிர்பார்ப்பு இருந்தது, அதன் பின்னர் அவருடனான சந்திப்பு நன்றாக அமைந்தது, அவர் பார்ப்பதற்கு நல்ல உடல் அமைப்போடு இருக்கிறார் என்று கூறியுள்ளார். இருப்பினும் அவனது தாயார் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

# திரை விமர்சனம்

# விசாரணை

நடிகர்: தினேஷ்
நடிகை: ஆனந்தி
இசை: ஜி.வி.பிரகாஷ்
ஒளிப்பதிவு: ராமலிங்கம்
இயக்கம்: வெற்றிமாறன்

நண்பர்களுடன் வேலை தேடி ஆந்திராவுக்கு வரும் நாயகன் தினேஷ் குண்டூரில் மளிகைக் கடை ஒன்றில் வேலைக்கு சேர்கிறார். தங்குவதற்கு இடம் இல்லாததால் நண்பர்களுடன் அங்குள்ள ஒரு பூங்காவில் தங்கியிருக்கிறார்கள்.

ஒருநாள் மளிகைக் கடையை திறக்க வரும் தினேஷ் ஆந்திரா போலீஸ் திடீரென கைது செய்கிறது. தன்னைப்போலவே தன்னுடைய நண்பர்களும் ஆந்திரா போலீசாரால் கைது செய்யப்பட்டிருப்பது தினேஷ்க்கு தெரிகிறது.

ஆந்திராவில் ஒரு பெரும் பணக்காரர் வீட்டில் காணாமல் போன நகைகளும், பணத்தையும் யார் திருடினார்கள் என்பது தெரியாததால், அந்த வழக்கை முடித்து வைப்பதற்காக இவர்களை அந்த குற்றத்தை ஒப்புக்கொள்ள சொல்லி விசாரணை என்ற பெயரில் போலீசார் பலவகையில் அவர்களை துன்புறுத்துகிறார்கள்.

இதே நேரத்தில் தமிழகத்தில் மிகப்பெரிய ஆடிட்டரான கிஷோரை ஊழல் வழக்கில் கைது செய்ய தமிழக காவல் துறை முயற்சி செய்கிறது. இதை அறிந்த கிஷோர் குண்டூர் நீதிமன்றத்தில் சரணடைய பார்க்கிறார். ஆனால், அவர் சரணடையும் முன்பே அவரை கைது செய்ய முயற்சிக்கிறது தமிழக காவல்துறை. இதற்காக, தமிழக காவல்துறை அதிகாரியான சமுத்திரகனி குண்டூர் வருகிறார்.

வருகிற சமயத்தில் நீதிமன்றத்தில் தினேஷ் மற்றும் அவர்களது நண்பர்களை காப்பாற்றி தன்னுடன் அழைத்து செல்கிறார். தங்களை காப்பாற்றிய சமுத்திரகனிக்காக, அவர் சொல்லும் வேலையை செய்ய தினேஷ் மற்றும் அவரது நண்பர்கள் முடிவெடுக்கிறார்கள். அதன்படி கிஷோரை கடத்தி சமுத்திரகனியிடம் ஒப்படைக்கிறார்கள்.



ஊர் திரும்பும் தினேஷ் மற்றும் அவரது நண்பர்கள் 4 பேரில் ஒருவர் வழியில் சொந்த ஊர் சென்று விடுகிறார். மற்றவர்கள் போலீசாரிடமே இருக்கும் நிலை உருவாகிறது. கைதான ஆடிட்டர் கிஷோரிடம் தமிழக போலீசார் விசாரணை நடத்துகின்றனர். கிஷோர், உண்மையை சொன்னால் அரசியல் பிரமுகர்கள் சிலர் சிக்கிக் கொள்வார்கள். எனவே, அவரை வைத்து கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்க போலீஸ் உயர் அதிகாரிகள் ஏற்பாடு செய்கிறார்கள். இந்த நிலையில் விசாரணை என்ற பெயரில் நடக்கும் சித்ரவதை காரணமாக ஆடிட்டர் இறந்து போகிறார். இதிலிருந்து போலீசார் தப்புவதற்காக பழியை அப்பாவி இளைஞர்கள் 3 பேர் மீதும் சுமத்தி அவர்களை என்கவுன்டரில் போட்டு தள்ள முடிவு செய்கிறார்கள். கடைசியில் இளைஞர்கள் நிலை என்ன? அவர்களை அழைத்து வந்த சமுத்திரக்கனி என்ன ஆனார்? என்பது மீதி கதை.

மொத்தத்தில் விசாரணை தீவிரம்.



சேதுபதி

அடுத்த வார இதழில்

நடிகர் : விஜய் சேதுபதி
நடிகை : ரம்யா நம்பீசன்
இயக்குனர் : அருண் குமார் ச
இசை : நிவாஸ் கே பிரசன்னா
ஒளிப்பதிவு : தினேஷ் கிருஷ்ணன்

## ஆசையை நிறைவேற்றிய ஐஸ்வர்யா

ஜாஸ்பா என்ற படம் மூலம் ரீஎன்ட்ரி ஆன ஐஸ்வர்யா ராய், தற்போது அமிர்தசரஸில் தனது அடுத்த படத்தின் படப்பிடிப்பில் பிஸியாக இருந்து வருகிறார். ஐஸ்வர்யா ராயின் படப்பிடிப்பு தகவலை அறிந்த பாதுகாப்பு வீரர்கள் அவரை பார்க்க வேண்டும் என்று விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.அவர்களின் விருப்பத்தை ஏற்று ஐஸ்வர்யா ராயும் படப்பிடிப்பு முடிந்தவுடன் அவர்களை சந்தித்து பேசினார்.மேலும், பாதுகாப்பு படை வீரர்கள் ஐஸ்வர்யாவிற்கு பரிசும் கொடுத்தனர். அவர்கள் கொடுத்த ராணுவ தொப்பியை அணிந்து கொண்டு அவர்களுடன் புகைப்படங்களும் எடுத்துக்கொண்டார் ஐஸ்வர்யா.

## - த்ரிஷா எனக்கு தங்கச்சி -
## ஆர்யா அடித்த பல்டி

தமிழ் சினிமாவின் ப்ளே பாய் என்று சொல்லப்படுபவர் ஆர்யா. இவர் எந்த கதாநாயகியுடன் இணைந்து நடித்தாலும் கிசுகிசு வந்துவிடும்.இந்நிலையில் இவர் சமீபத்தில் பெங்களூர் நாட்கள் படத்தின் ப்ரோமோ'னில் இருந்த போது, இப்படம் குறித்து சில டுவிட் செய்தார்.அதில், த்ரி'ா எனக்கு தங்கச்சி மாதிரி ஆனால் ராணாவிற்கு இல்லை என கிண்டலாக தெரிவித்தார்.

## நட்பிற்காக அனிருத் செய்த உதவி

தமிழ் சினிமா இசையமைப்பாளர்களில் அனிருத் மிகவும் பிஸியான இசையமைப்பாளர். இவர் தற்போது கனடா, மலேசியா என கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.இந்நிலையில் நண்பர்கள் யாராவது பாட அழைத்தால், உடனே நேரம் ஒதுக்கி பாடி கொடுத்து விடுவார்.அந்த வகையில் தற்போது எத்தனை பிஸியாக இருந்தாலும், தோழா படத்திற்காக இசையமைப்பாளர் கோபிசுந்தர் அழைத்ததற்காக ஒரு பாடலை பாடி கொடுத்துள்ளாராம்.

## ராதாரவி ஓபன் டாக்



நடிகர் சங்க தேர்தலின் போது ராதாரவி பேசியது எல்லாம் அனைவரும் அறிந்ததே. அவர் எல்லோரையும் பெயர் சொல்லி தான் அழைப்பார்.சமீபத்தில் ஒரு பேட்டியில் கூட இதுக்குறித்து இவர் நான் என் சக நடிகர்கள் அனைவரையும் பெயர் சொல்லி தான் அழைப்பேன். ஆனால், அஜித்தை மட்டும் தான் இன்று வரை சார் என்று அழைக்கிறேன்.ஏனெனில் அவரின் உதவி மனப்பான்மை என்னை மிகவும் கவர்ந்தது, யார் எந்த உதவி கேட்டாலும் லட்சம் லட்சமாக அள்ளிக்கொடுப்பார், அவரை போலவே தற்போது சூர்யா கூட S3 படப்பிடிப்பில் ஒருவரின் கல்விக்காக ரூபா 1 லட்சம் கொடுத்தார் என கூறியுள்ளார்.

## சிம்பு படைத்த சாதனை

சிம்பு என்றாலே அவரை சுற்றி பல வம்புகள் இருக்கும். இந்நிலையில் சமீபத்தில் தான் பீப் பாடல் குறித்து தன் தரப்பு நியாயங்களை கோவை போலிஸாரிடம் கூறினார்.பீப் பாடல் பிரச்சனைகள் எல்லாம் தள்ளிப்போகாதே பாடல் நீக்கியது என்றால் கூட மிகையல்ல, அந்த அளவிற்கு ரகுமானின் இசையில் அந்த பாடல் பெரும் வைரலானது, தமிழ் பாடல்களில் யு-டியூபில் குறுகிய நாட்களில் 50 லட்சம் ஹிட்ஸை தாண்டிய பாடல் என்ற சாதனையை தற்போது பெற்றுள்ளது. மேலும், 46 ஆயிரம் லைக்ஸ்"கள் இப்பாடலுக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஹாலிவுட் கலைஞர்களை கோலிவுட்டிற்கு அழைத்து வந்த ஷங்கர்

ஷங்கர் தற்போது 2.0 படத்தில் பிஸியாகவுள்ளார். இப்படத்தில் ரஜினிகாந்த், அக்ஷய் குமார், எமி ஜாக்ஸன் ஆகியோர் நடித்து வருகின்றனர்.தற்போது இப்படத்தின் சண்டைக்காட்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த சண்டைக்காட்சியை வடிவமைக்க ஹாலிவுட் கலைஞர்களான கென்னி பேட்ஸ், ஆரோன் க்ரிபனும் சென்னை வந்துள்ளனர். இவர்கள் ஹாலிவுட் படமான "டை கார்ட்" மற்றும் "ட்ரான்ஸ்பார்மர்ஸ்" படங்களுக்கு சண்டைக்காட்சிகள் வடிவமைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY


MOBILE

## காற்றில் விம்பங்களை உருவாக்கும் தொழில்நுட்பம்




சிறிய புரொஜெக்டர்களின்(Projector) ஊடாக பெரிய திரைகளில் விம்பங்களை உருவாக்கும் தொழில்நுட்பம் இன்று பல்வேறு துறைகளிலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. இவ்வாறிருக்கையில் திரைகள் இன்றி காற்றிலேயே விம்பங்களை உருவாக்கக் கூடிய தொழில்நுட்பத்தினை மிட்சுபிஸி நிறுவனம் உருவாக்கியுள்ளது.

Aerial Display எனப்படும் இத் தொழில்நுட்பத்தின் ஊடாக 142 சென்ரிமீற்றர்கள் வரையான விம்பங்கள் உருவாக்கி பரிசோதிக்கப்பட்டுள்ளன. நிழற்படங்கள் மட்டுமின்றி, வீடியோ காட்சிகளின் விம்பங்களையும் காற்றில் உருவாக்கக்கூடிய இத் தொழில்நுட்பம் மேலும் மேம்படுத்தப்பட்டு வரும் நிலையில் 2020ம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இத் தொழில்நுட்பம் செயற்படும் விதத்தினை விளக்கும் படம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.



## கைத்தொலைபேசி செய்தி போனிற்கு நிகரான ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்யும் ZTE


ZTE தனது புத்தம் புதிய இரு ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்யவுள்ளதாக Mobile World Congress நிகழ்வில் அறிவித்துள்ளதுடன், அவை தொடர்பான தகவல்களையும் வெளியிட்டுள்ளது.



இதன்படி ZTE Blade V7 மற்றும் Blade V7 Lite எனும் இரு வகையான ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்யவுள்ளது. இவற்றில் ZTE Blade V7 ஆனது 5.2 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டதாகவும், Octa Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றுடன், 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்பினை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றினையும், 2500 mAh மின் கலத்தினையும் கொண்டுள்ளது.

இதேவேளை Blade V7 Lite ஆனது 5 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய HD தொடுதிரையினையும், தலா 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றினையும் ஏனையவை ZTE Blade V7 கைப்பேசிக்கு நிகரான அம்சங்களை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

## LG G5 ஸ்மார்ட்கைப்பேசி




வாடிக்கையாளர்களின் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள LG G5 ஸ்மார்ட்கைப்பேசி தொடர்பான வீடியோ வெளியாகியுள்ளது.

Qualcomm Snapdragon 820 ப்ராசசர் வசதி மூலம் இயக்கப்படுகிறது, 4GB RAM நினைவகம், 32GB சேமிப்பு வசதி கொண்டது.

5.3 இன்ச் தொடுதிரை, முழு HD தீர்மானத்துடன் 2560 x 1440 பிக்சல் மற்றும் யுனசநழெ 530 GPU வசதியுடன் வருகிறது.

மேலும், 3 கமெரா வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன, முன்புற கமரொ 5 மெகாபிக்சல் வசதி கொண்டது, (செல்பி மற்றும் வீடியோ அழைப்புகளுக்கு பயன்படும்), பின்புற கமெரா 16 மெகாபிக்சல் வசதி கொண்டது. மேலும் மற்றுமொரு கமெரா 8 மெகாபிக்சல் கொண்டது. தற்போது, இந்த கைப்பேசியில் உள்ள அம்சங்களை, 1 நிமிட அளவில் ஒரு முன்னோட்டாமாக வெளியிடப்பட்டுள்ளது



## பொது இடங்களில் உள்ள Wi-Fi பயன்படுத்துபவர்களே எச்சரிக்கை




இணைய தொடர்பாடலின் நவீன தொழில நுட்பமான Wi-Fi ஆனது வேகம் கூடியதாக இருப்பதுடன், இன்று பல பொது இடங்களில் இலவசமாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. இதன் இலகு தன்மை, இலவசம் மற்றும் வேகம் காரணமாக பெருமளவானவர்கள் இவ் வலையமைப்பு தொழில்நுட்பத்தினையே அதிகளவில் பயன்படுத்த ஆர்வம் காட்டுகின்றனர். இவ் ஆர்வம் ஆனது பல சமயங்களில் அதனைப் பயன்படுத்துபவர்களுக்கு ஆபத்தாக அமைவதாக ஆய்வு ஒன்றின் ஊடாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விமான நிலையம் ஒன்றில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் 4 மணிநேரத்தில் சுமார் 2,000 பேர் வரை Wi-Fi வலையமைப்பினை பயன்படுத்தியிருந்ததுடன் 8 மில்லியன் டேட்டா பக்கெட்களை பரிமாற்றம் செய்திருந்தனர்.

இந்த டேட்டாக்களை தனி நபர் நலன் கருதி Wi-Fi சேவையை வழங்கிய நிறுவனம் சேமிப்பது இல்லையெனினும் இவ் வலையமைப்பில் இணைந்துகொண்டு தனி நபர்களின் தரவுகளை கையகப்படுத்துவதற்கான சாத்தியம் ஹேக்கர்களுக்கு அதிகம் இருப்பதாக கண்டுபிடித்துள்ளனர்.

OTHER

## Radio Flyer-இன் சிறிய Tesla Model S

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பெற்றோர்களினால் தமது குழந்தைகளை அயலுக்கு கொண்டு செல்லப்பயன்படும் சிவப்பு இழுவைவண்டி தயாரிப்பாளர்களாக அறியப்படும் Radio Flyer ஆனது Teslaவுடன் இணைந்து குழந்தைகளுக்காக சிறிய மின்னியல் Model SI வெளியிடவுள்ளது. 499 ஐக்கிய அமெரிக்க டொலர் மதிப்புடைய குழந்தைகளுக்கான Model ளுக்கு தற்போது முற்பதிவு செய்யக்கூடியதாகவுள்ளதுடன், எதிர்வரும் மே மாதத்தில் இது சந்தைக்கு வரவுள்ளது.



## ஒரே நேரத்தில் 60 நாடுகளில் கிடைக்கவிருக்கும் Samsung Galaxy S7

உலக ஸ்மார்ட் கைப்பேசி சந்தையில் அப்பிள் நிறுவனத்திற்கு அடுத்தபடியாக திகழும் சாம்சுங் நிறுவனமானது Galaxy S7 ஸ்மார்ட் கைப்பேசியினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.



கைப்பேசி பாவனையாளர்களிடத்தில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் இக் கைப்பேசியானது எதிர் வரும் மார்ச் மாதம் 11ம் திகதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இவ்வாறு அறிமுகம் செய்யப்படும் தருணத்திலேயே 60 வரையான நாடுகளில் உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் என Mobile World Congress நிகழ்வின்போது சம்சுங் நிறுவனத்தில் பணியாற்றும் முழா குழபெ-துவை என்பவர் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த 60 நாடுகளும் எவை என்ற தகவல் வெளியிடப்படாத நிலையில் அமெரிக்க, ஐக்கிய இராச்சியம் உட்பட ஏனைய ஐரோப்பிய நாடுகளும் உள்ளடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## "கடவுளோடு விளையாடலாம்" புத்தம் புதிய விளையாட்டு



Smite என்ற நிறுவனம் "போர்க்களத்தில் கடவுள்கள்" என்ற பெயரில் புதிய விளையாட்டினை அறிமுகப படுத்தியுள்ளது. இந்த விளை - யாட்டு சம்பவம் தொடர்பான பணிகளான Alpha testing phase முடிவடைந்ததையடுத்து, தற்போது விளையாட்டாளர்களுக்கான இந்த பதிவு ஆரம்பமாகியுள்ளது.

இந்த விளையாட்டு PlayStation 4 - ல் கிடைக்கிறது. புராணக் கதைகளை அடிப்படையாகக்கொண்டு, உலகளவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 70 கடவுள்கள் போர்க்களத்தில் சண்டையிடுவது போன்ற விளையாட்டாகும். இந்த விளையாட்டினை நீங்கள் இலவசமாக விளையாடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரமானவனின் மனது

நான் விவாகரத்தானவன். இப்பதிவானது எனது சுயத்தை நான் கேள்விக்கு-ட்படுத்தியபோது என் மனதில் தோன்றியவையே. மற்றவர்கள் என்னுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்று பேசுவது நாகரீகமற்றது என்பதால் நான் மற்றவரின் எதுவித சரி, பிழைகளைப் பற்றியும் இங்கு பேசப் போவதில்லை. இந்தப் பதிவினை நீங்கள் வாசித்தபின் சக மனிதன் ஒருவனின் தவறுகளைக் "கற்றுக்கொண்ட பாடங்களாக" நோக்குவீர்களாயின் நான் இப்பதிவினை எழுதிய நோக்கம் வெற்றி பெற்றிருக்கிறது என்பேன். பின்னூட்டங்களையும் "சஞ்சயன்" என்னும் தனிமனிதனின் வாழ்க்கையனுபவம் என்பதைத்தவிர்த்து இது பேசப்பட வேண்டியதொரு விடயம், பலரும் சுயத்துடன் உரையாடவேண்டிய விடயம் என்னும் நோக்கத்தின் அடிப்படையில் எழுதுவீர்களாயின் இரட்டிப்பு மகிழ்ச்சி.

மனித உறவுகள் மிகவும் சிக்கலானவை. அதிலும் சேர்ந்து வாழும் மனிதர்களின் உறவுகள் மிகவும் மிக மிகச் சிக்கல்கள் நிறைந்ததாக மாறிவிடுவதுண்டு. நானும் இப்படியானதொரு உறவினைக் கடந்து வந்தவன். அந்த வலிகள் இன்றும் என்னுள் உறைந்துவிட்டிருக்கின்றன. இன்றும் சில சம்பவங்களோ, நினைவுகளோ, அல்லது காட்சிகளோ அந்த நாட்களை அல்லது சம்பவங்களை உயிர்ப்பித்து விடும். அப்போது அவை நடைபெற்றபோது இருந்த மனநிலை, சூழ்நிலைகள் நினைவில் வந்து, என்னில் எனக்கு அருவருப்பு ஏற்படும், இதயம் படபடக்க உடம்பு முழுவதும் ஒருவித பலத்த அசௌகரீயத்தை உணர்வேன், அந்த நினைவில் இருந்து உடனேயே கழன்று கொள்ளவேண்டும் போல் உணர்வேன். ஏதோ அசிங்கந்தை மிதித்துவிட்டது போலிருக்கும்.

தற்போதேல்லாம் கடந்து காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் இடையில் பல ஆண்டு இடைவெளி ஏற்பட்டிருப்பதால், கடந்துபோன வாழ்க்கைச் சம்பவங்கள் எனது பிழைகளை அப்படியே படம் போட்டுக்காட்டுகின்றன. ஆச்சரியமாய் இருக்கிறது. நான் அத்தனை மோசமான குணங்களைக் உடையவனா என்று எண்ணும்போது!

கோபம் தலைக்கேறி நின்று ஆடும்போது, நிதானம் இழந்து, என்னிலை மறந்து எத்தனை எத்தனை கூத்துக்களைக் காட்டியிருக்கிறேன். கொலைவெறி என்பதன் உ[illegible]மை அர்த்தத்தை மிக நெருக்கமாகவே உண[illegible]ந்து, சக மனிதன் ஒருவனுக்கு எத்தனை [illegible]லிகளை கொடுக்க முடியுமோ அதை அ[illegible]ற்றுக் கொடுத்திரு-க்கிறேன். எனக்குள் [illegible] வன்முறையாளன் இருக்கிறான் என்பதை [illegible]ல ஆண்டுகள் கடந்த பின் சற்று எட்டத்தில் இருந்து, கடந்துபோன கால[illegible]ந்தை எட்டிப்பார்க்கையில் புரிகிறது. [illegible]காலங்களில் வன்முறை என்ற பிரக்ஞை இல்லாமலே வன்[illegible]யுடன் புணர்ந்து அடங்கி ஓய்ந்திருந்திருக்கி[illegible]ன். மற்றையவரின் வலி எனக்கு மகிழச்சிய[illegible]ப் இருந்திருக்கிறது.

குழந்தைகளின் [illegible]லைகளை எள்ளளவேனும் கருத்தில்கொள்ளா[illegible], மற்றையவர் மீதான எனது உளவியல் வன்முறை இருந்திருக்கிறது. மெதுவாய் ஆரம்பிக்கும் உரையாடல், சொற்களின் வீரியத்தால் வேகம்கொண்டு, விவாதமாகி, வெடித்துச் சிதறும்போது குழந்தைகளின் கனவுகளை நான் அழித்திருந்ததை அந்நாட்களில் புரிந்து கொள்ளமுடியவில்லை. இன்று மிஞ்சியிருப்பது

## சஞ்சயன் செல்வமாணிக்கம்


## மணவிலக்கானவனின் சாட்சியம்

குழந்தைகள் மீதான எனது குற்ற உணர்ச்சி மட்டுமே.

மற்றையவர்களின் மனநிலைகளைப் புரியாது வார்த்தைகளைத் தீட்டி நுனியில் விச வார்த்தைகளைப் பூசியபின், குறி தவறாது எய்திருக்கிறேன். மற்றையவரின் எதிர்வினையில் வீறுகொண்டு எழுந்து மீண்டும் மீண்டும் அதிக வார்த்தை விசம் கலந்து எய்திருக்கிறேன். ஒரு வாழ்க்கையை வார்த்தைகள் அழித்துக் கொண்டிருந்ததை அன்று என்னால் உணரமுடியவில்லை, குரூரங்களின் வெற்றி தந்த போதையினால். எனது குழந்தைகளின் மனம், அமைதி ஆகியவை பற்றிய எதுவித சிந்தனையும் இருக்கவில்லை, ஏன், எனது எதிர்கால வாழ்க்கை பற்றிய பிரக்ஞையும் இருக்கவில்லை என்றே இன்று உணர்கிறேன்

வானில் இருந்து விழும் எதையும் மௌனமாய் ஏந்திக்கொள்ளும் பூமிபோல, குழந்தைகளும் பெற்றோரின் யுத்தகளத்தை, குரூரமான வார்த்தைகளை, துசணங்களை, செயல்களை, குரூரங்களை எதுவித விமர்சனமும் இன்றி, எதிர்ப்பும் இன்றி ஏற்றுக்கொண்டார்கள். அவை ஏந்திய அனைத்தும் என்னை நோக்கி ஏதோ ஒரு விதத்தில், ஒரு நாள் வீசப்படும் என்று தெரியாதவனாய் நான் விதைத்துக் கொண்டிருந்தேன். அதன் விளைவுதான் இன்று தன்னம் தனியே ஒரு தோல்வியுற்ற தந்தையின் மனநிலையில் நான் கடந்துகொண்டிருக்கும் வாழ்வு. குழந்தைகளினுள்ளும் நாம் விதைத்த அந்த விசத்தின் விதைகள் விதைக்குப்பட்டிரு-க்குமோ என்ற கேள்வி பெரும் பாறையின் கனத்துடன் மனதினுள் இருக்கிறது.

இரண்டு பெரிய மனிதர்கள் தத்தமது கருத்துப்பகிர்வுகளை சுமூகமாக முடித்துக் கொள்ளத் தெரியாதவர்களாய் இருந்ததால், ஆரம்பத்தில் கருத்துப் பகிர்வாக இருந்தவை . எல்லாம் காலப்போக்கில் விவாதங்களாக மாறி. விவாதங்கள் வார்த்தைக் குண்டுகளில் வெடித்துச் சிதறி முடிந்தபோது எனது வாழ்க்கையின் அத்திவாரம் பிளவுபடத் தொடங்கியிருந்ததை நான் அறிந்துகொள்ளவில்லை.




---

## மூடநம்பிக்கை கொள்ளல் தவறானதே!!

( தன்யா )




திருகோணமலை மாவட்டத்தில் இடம் பெற்ற ஓர் சம்பவம்........

ஒரு சுட்டி ஆண்மகனைப் பெற்றெடுத்தனர் பாலாஜியும் காஞ்சனாவும். தீசன் என பெயரும் இட்டனர். அவன் மிகவும் சுட்டியானவன். அவன் கேட்கும் கேள்விகளுக்கு பெற்றோரால் விடை பகரவே முடியாது. பயம் என்பது அவனுக்கு துளியும் இருந்ததில்லை. சிலவேளைகளில் இரவு நேரங்களில் தாய் வெளியே செல்ல வேண்டுமாயின் இவனையே துணைக்கு அழைத்துச் செல்வாள். ஏனெனில் மிகுந்த பயந்த சுபாவம் கொண்டவர் அவனது தாய்.

தாய், தந்தை இருவருமே வேலைக்குச் செல்பவர்கள். முன்பள்ளிக்கு செல்லும் அவனுடன் 12.30 முதல் 1.30 வரை தந்தையும் 1.30 தொடக்கம் 2.30 மணி வரை தாயும் இருப்பர். பின்னர் தந்தை 4.30 மணியளவில் வீடு செல்வார் தாயார் 5.00 மணிக்கு வீடு செல்வார். அந்த இடைநேரமான 2.30 தொடக்கம் 4.30 மணி வரை தீசன் தனியாகவே வீட்டில் இருப்பான்.

அவனுக்கு பேய் படங்கள் மற்றும் திகில் படங்கள் பார்பதென்றால் மிகவும் பிடிக்கும். தாய் செல்லும் போது கார்டூன் சனலில் விட்டுவிட்டு சற்று நேரத்தில் உறங்கிவிடுவான் எனும் எண்ணத்தில் செல்வாள். இவனோ தாய் நிற்கும் போது நித்திரைக்கு செல்பவன் போல் பாசாங்கு செய்வது வழக்கம். பின்னர் தாயின் மோட்டார்சைக்கிளின் சத்தம் மறைந்தபின் உடன் தனக்கு பிடித்தவற்றை மாற்றிப் பார்ப்பான்.

எப்போதும் அதே எண்ணத்தில் அதே நாயகர்களைப் போல் கதைப்பான். தாயை ஏதேனும் செய்து பயப்படுத்துவது போன்ற சேட்டைகளை செய்வான்.

இவற்றை பெரிதாக பார்த்திராத தாய், தந்தையர் தமது வேலைகளைத் தொடர்ந்தனர். அக்காலகட்டத்தில் தாயார் கர்ப்பமாக இருந்தமையால் அவரால் அவனை வெகுவாக கவனிக்கத் தவறியிருந்தாள்.

நாட்கள் உருண்டோடின.....

அமைதியும் பொறுமையும் சுட்டித்தனமுமாக இருந்த தீசனின் மனநிலையில் மாற்றம் உண்டாகத் தொடங்கியது. இருப்பினும் அதை யாரும் அறிய மறுத்திருந்தனர்.

அன்றும் அவன் மதியம் 2.45 மணி இருக்கும் அவனுக்கு பிடித்தமான பேய் சம்பந்தமான ஒரு ஆங்கில திரைப்படத்தில் மூழ்கியிருந்தான். பேய் வரப்போகுது என எதிர்பார்த்திருந்து இரண்டாவது முறை தோற்றிருந்த போது எதிர்பாரா நேரத்தில் திடீரென தொலைக்காட்சி திரை முழுவது தெரிவது போன்ற ஓர் பயங்கர தோற்றத்தில் பயங்கரமான பின்னணி இசையுடன் பேய்.

கண்கள் வெட்ட மறுத்தன அவனுக்கு.... நினைவினில் நின்று 2 வினாடிகள் நீங்க மறுத்த அதன் தோற்றம், அகோர பற்கள், பயத்தை அதிகரிக்கும் பின்னணி இசை....... அறையோ இருட்டாக..... எங்கிருந்தோ காற்று திடீரென பலமான வீசிற்று....... வாய் திறந்தான் மூச்செடுக்க மூளை பணிக்க மறந்த அக்கணம்.........

விக்கல், விக்கினான் ....... கடினபட்டு மூச்செடுத்தான். செய்வதறியவில்லை குழந்தைக்கு......

நல்லவேளை மணி 4.35 தந்தை கதவருகே..... மகனது நிலையை பார்த்ததும் புரிந்து கொண்டார்.

உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். வைத்தியர்கள் பலவாறு முயன்று மகனைக் காப்பாற்றினார்கள். விடயம் அறிந்து விரைந்த தாயார் அழுது புலம்பினாள்.

பழைய மாதிரியே தமது மகனை மீட்டெடுத்தனர். எனினும் அவனது பேச்சுத் திறன் அற்றுப் போனது. தற்பொழுது எதைக் கண்டாலும் பயப்படுகிறான். தனியே இருப்பதே இல்லை. எந்நேரமும் கறுப்பை வெறுக்கின்றது அப்பிஞ்சு உள்ளம்.

பல்வேறு பயிற்சிகள், சிகிச்சைகளுக்குப் பின் சிறிது காலமாக தடக்கி தடக்கி பேச தொடங்குகின்றான். எனினும் தொடர்ந்தும் சிகிச்சை நடந்து கொண்டிருக்கின்றது.

இன்று அவன் அந்த இடைநேரத்தில் உறங்குவது அவனது பாட்டியின் மடியில்....

---

## காதலனுடன் சேர்ந்து கணவனை கொல்லும் முயற்சி....

*மீகமவில் நிகழவிருந்த கொலை முயற்சி (ரிவிர 28.01.2016)*

*கடந்தவார தொடர்ச்சி.. ..*

லசன்தியின் கள்ளக் காதலன் ரவி இலங்கை வந்து லூஜினை தீர்த்துக்கட்ட வழி சமைக்கின்றான். தோட்டத்திற்கும் சென்று விசாரிக்கின்றனர். யார் தன்னைப் பற்றி விசாரித்தது என்பது குறித்து ஒரே நச்சரிப்பாகவே இருந்தது அவருக்கு.

மறுநாள் தொலைபேசி ஒலித்தது.

ஹலோ! யார் கதைக்கிறீங்க என்றார் லூஜின். மறுபுறம் தாங்கள் அவரின் தோட்டத்தை விலை பேசுவதற்காக எடுத்ததாக தெரிவித்தது அந்த ஒலி. எடுத்தது வேறு யாருமில்லை. சமன். கூட இருந்தவன் டனுஷ்க. அவர்கள் தாமே அந்த தோட்டத்தை வாங்குவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்ததுடன் இது குறித்து மேலதிக தகவல்கள் குறித்து கதைப்பதற்காகவும் முற்பணத்தை தருவதற்காகவும் லூஜினை சந்திக்க விரும்புவதாகவும் தெரிவித்ததுடன் இவற்றிற்காக லூஜினை கட்டுநாயக்காவிலுள்ள நயோமி உணவகத்திற்கு வருமாறும் அழைத்தனர். எனினும் இவற்றை கதைப்பதற்காக ஏன் உணவகம் செல்ல வேண்டும்? எனது வீட்டிற்கு வரலாமே என வீட்டிற்கு அழைத்தார் லூஜின்.

பேச்சு மாறி மாறி போனது. அவர்கள் வீட்டிற்கு வருவதற்கு சம்மதிக்கவே இல்லை. மாறாக லூஜினை தமது கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வைத்தனர். நாளை இரவு அந்த குறிப்பிட்ட உணவகத்தில் சந்திப்பதற்காக இரு தரப்பும் இணங்கிய பின் தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்பட்டது.

தாம் எதையோ சாதித்து விட்டதாகவும் நாளை அனைத்தும் முடிந்து விடும் பெருமளவு பணமும் தமக்கு கிடைத்துவிடும் என இருவரும் பெரும் மகிழ்ச்சியில் ஒருவரை-யொருவர் பார்த்து புன்முறுவல் பூத்தனர்.

இது குறித்து ரவிக்கும். டுபாயிலிருக்கும் ஷாந்தவிற்கும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் தாம் மறுநாள் நடைமுறைப்படுத்த வேண்டியவற்றை தயார்படுத்தினர் ரவி உட்பட மூவரும். மறுநாள் இது குறித்து ஏற்கனவே அறிந்திருந்த லூஜினின் மனைவியான லசன்தி எதுவித அசுமாத்தமும் இல்லாமல் தனது வேலைகளை செய்தாள். வழமையாக இருப்பது போலவே இருந்தாள்.

தனக்கு இன்றுடன் ஒரு விடிவு கிட்டப் போவதை எண்ணி மனம் சந்தோசத்தில் துள்ளிக் குதித்தது. எனினும் அகத்தின் அழகினை முகத்தில் காட்டாது சமாளித்தாள் லசன்தி.

லூஜின் தயாராகியதும், எங்கே போறீங்க என வினவினாள் லசன்தி. தோட்டம் விற்கிறது சம்பந்தமாக இருவரை சந்திக்க செல்வதாக பதிலுரைத்தார் லூஜின். கூறியவாறே தனது மோட்டார் சைக்கிளினை இயக்கி மெல்ல நகர்ந்து ஒழுங்கையைக் கடந்து பிரதான வீதிக்கு வந்தார். மெல்ல மோ.சைக்கிள் நகர்ந்து கொண்டிருந்த வேளை வீட்டு மாடியில் நின்ற வண்ணம் லூஜின் போவதை பார்த்திருந்த லசன்தி, உங்களின் கடைசிப் பயணம் என எண்ணி பெரு மூச்சு விட்டாள்.

சற்று தூரம் சென்றதும் தனது மோட்டார் சைக்கிளின் பின்னால் ஒரு மோட்டார் சைக்கிள் வீதியில் தனது பயணத்தை தொடர்ந்திருந்ததை உணர்ந்தார். அப்போது மணி 8[illegible]ஐ தாண்டி இருந்தது.

அச்சமயத்தில் பின்தொடர்ந்த மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் லூஜினை பின்தொடர்ந்தார்களா அல்லது சாதாரண பயணிகளா!!!!

தொடரும்...

*மொழியாக்கம் : தன்யா*

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பு மாற்றமும் சிங்கள குடியானவர்களும்

## சமஸ்டி என்பது பிரிவினைக்கானது அல்ல: என்பதை சிங்களத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக வேண்டும்...

- நிலாந்தன் -
(www.globaltamilnews.net)

இம்மாதம் 11ஆந் திகதி கிளிநொச்சியில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. அரசியலமைப்பு மாற்றங்களில் குடியானவர்களின் பங்களிப்புத் தொடர்பான இக்கலந்துரையாடல் தேசிய கிறிஸ்தவ மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக் கலந்துரையாடலின் போது தென்னிலங்கையைச் சேர்ந்த ஏற்பாட்டாளர்களில் ஒருவர் கலாநிதி றோகான் எதிரிசிங்க சுட்டிக்காட்டியிருந்த ஓர் உதாரணத்தை மேற்கோள் காட்டிப் பேசினார். அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பாக தென்னிலங்கையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒரு கலந்துரையாடலின்போது றோகான் எதிரிசிங்க கென்னிய நாட்டு உதாரணம் ஒன்றைச் சுட்டிக்காட்டியுள்ளார். கென்யா நாட்டில் அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பாக குடியானவர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டபோது ஒரு சந்திப்பில் ஒரு முதிய விவசாயி தனது ஆட்டுக்குப் போட புல் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவருடைய கருத்து கவனத்தில் எடுக்கப்பட்டு கென்யாவின் அரசியலமைப்பு மாற்றப்பட்ட பொழுது மேய்ச்சல் தரைகளை உருவாக்குவது தொடர்பில் புதிய ஏற்பாடுகள் இணைக்கப்பட்டதாக கலாநிதி றோகான் எதிரிசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு ஏழை விவசாயியின் ஆட்டுக்கு புல் வேண்டும் என்று சிந்தித்து அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்யப்படுமாக இருந்தால் அது அந்த நாட்டின் ஜனநாயகச் செழிப்பையே காட்டும். ஆயின் இலங்கைத்தீவின் நடைமுறை எவ்வாறு உள்ளது?

அரசாங்கத்தின் அரசியலமைப்பு நிபுணர் குழுவில் அங்கம் வகிக்கும் ஒரு சிங்கள புத்திஜீவி கடந்த ஆண்டின் இறுதியளவில் சில நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருக்கும் போது தெரிவித்திருந்த கருத்துக்களை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அது ஓர் உத்தியோகபூர்வ உரையாடல் அல்ல. நட்பு ரீதியான இலேசான ஒரு உரையாடல். அதில் ஒரு தமிழ் அரசியல் வாதியும் இருந்திருக்கிறார். அவர் தமிழ்மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியைச் சேர்ந்தவர். அங்கு பேரவை தொடர்பாகவும் கதை வந்திருக்கிறது. அதன்போது மேற்படி புத்திஜீவி சொல்லியிருக்கிறார் அரசியலமைப்புத் தொடர்பாக எல்லா முடிவுகளும் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டன என்ற தொனிப்பட.

இது போலவே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் முடிவுகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டதாக ஓர் ஊகம் உண்டு. ஆட்சிமாற்றத்திற்கு முன்னர் சிங்கப்பூரில் நடந்த ஒரு திரைமறைவு சந்திப்பின் போது இதுதொடர்பில் முடிவுகள் எடுக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகிறது.

அப்படியானால் வழமைபோல மேலிருந்து ஏற்கனவே முடிவுகளை எடுத்துவிட்டு கீழிருந்து கருத்துக்களைப் பெற்று அரசிலமைப்பை மாற்றப் போவதாக கூறப்படுவது ஒரு நாடகமா? அல்லது கண் துடைப்பா? "நல்லாட்சியின் காட்சியறையாக" இச்சிறு தீவைக் கட்டியெழுப்பும் மலிவான உத்திகளில் இதுவுமொன்றா?

இதுதொடர்பில் ஏற்கனவே ஒரு கட்டுரை "அரசியலமைப் பு மாற்றமும் தமிழ்க்குடியானவர்களும்" என்ற தலைப்பில் இக்கட்டுரையாசிரியரால் சில வாரங்களுக்கு முன் எழுதப்பட்டிருக்கிறது. இலங்கைத்தீவின் கடந்த பல தசாப்தகால அனுபவங்களின் அடிப்படை-யில் குறிப்பாக கடந்த சுமார் 7 ஆண்டுகால அனுபவங்களின் அடிப்படை யில் பார்த்தால் இவ்விடயப்பரப்பு அதிகம் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாயிருக்கும்.



அது என்னவெனில், இப்பொழுது நாட்டுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது குடியானவர்களின் கருத்தைக்கேட்பதா? அல்லது குடியானவர்கள் மத்தியில் கருத்தை உருவாக்குவதா? என்பதே.

ஏனெனில் அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பாக, குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக கருத்துக்களைக் கேட்கப் போனால் நாடு இப்பொழுதும் இரண்டாகப் பிளவுண்டிருப்பதைக் காணலாம்.

தமிழ்மக்களில் பெரும்பாலான-வர்கள் ஒற்றையாட்சி முறையை மாற்ற வேண்டும் என்றும், சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட சமஷ்டியே வேண்டும் என்றும் கேட்டுவருகிறார்கள். மக்களுடைய ஆணையைப் பெற்ற கூட்டமைப்பும் ஏறக்குறைய அதைத்தான் கேட்கிறது. மக்கள் பேரவையும் அதைத்தான் கேட்கிறது. ஆனால் சிங்கள மக்கள்?

அவர்கள் சமஷ்டியை ஒரு பூதமாகப் பார்க்கிறார்கள். அது பிரிவினைக்கு இட்டுச்செல்லும் என்று பார்க்கிறார்கள். இச்சிறுதீவில் முதன் முதலாக சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தது சிங்களத் தலைவராகிய பண்டாரநாயக்கா தான் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

இத்தகையதோர் களயதார்த்தத்தின் பின்னணியில் தமிழ்மக்களையும், சிங்களமக்களையும் திருப்திப்படுத்தும் ஒரு தீர்வை எப்படிக் கண்டுபிடிப்பது?

சிங்களமக்களுக்கு ஒற்றையாட்சி போலத் தோன்றுவதும் தமிழ் மக்களுக்கு சமஷ்ரி போலத் தோன்றுவதுமாகிய ஒரு தீர்வையே கண்டுபிடிக்க வேண்டும். அதாவது இருதரப்பு பொதுமக்களுக்கும் பொய் சொல்ல வேண்டும். வார்த்தை களை வைத்து விளையாட வேண்டும்.

ஆனால் பொய்களிலிருந்து நல்லிணக்கம் ஊற்றெடுப்பதில்லை. பொய்களின் மீது நிலைமாறு காலகட்ட நீதியைக் கட்டியெழுப்ப முடியாது. பொய்களின் மீது கட்டியெழுப்பப்பட்ட எந்தவொரு தீர்வும் நின்று நிலைத்தது-ல்லை. எனவே சிங்கள மக்களுக்கும், தமிழ்மக்களுக்கும் உண்மை சொல்லப்பட வேண்டும். அந்த உண்மையை ஜீரணித்துக்கொள்ளத்தக்க ஒரு பொது உளவியலைக் கனியச்செய்ய வேண்டும்.

தமக்கு ஏற்பட்ட இழப்புக்களு-க்கும், கூட்டுக் காயங்களுக்கும், கூட்டு மனவடுக்களுக்கும் உரிய நீதியைக் கோரிவரும் தமிழ்மக்களுக்கு பொய்களைக் கொடுக்க முடியாது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகப் பிரிவினை கோரி ஆயுதம் ஏந்திப் போராடிய ஒரு சமூகம் இப்பொழுது சமஸ்டித்தீர்வுக்குத் தயாரகக் காணப்படுகிறது. தமிழ் அரசியல் அரங்கில் ஆகப்பிந்திய வருகையாகிய பேரவைகூட அதன் தீர்வு முன்மொழிவு களில் நெகிழ்ச்சியான ஒரு போக்கைக் கடைப்பிடித்திருக்கிறது. ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பதை அது ஒத்தி வைத்திருக்கிறது. ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது பேரவையின் முன்மொழிவுகளில் அடிக்குறிப்பாக மாற்றப்பட்டிருக்கிறது.

பேரவையின் முன்மொழிவை ஒரு முழுநிறைவான சமஸ்டி என்று கூறமுடியாது. அதேசமயம் அது புதிய சமரச வெளிகளைத் திறந்து வைத்திருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்மக்கள் தரப்பிலிருந்து காட்டப்பட்ட ஆகப்பிந்திய சமிக்ஞை அது.

தமது வன்சக்தி முற்றாகத் தோற்கடிக்கப்பட்ட பின் கடந்த சுமார் 7 ஆண்டு காலமாக தமிழ்மக்கள் தரப்பிலிருந்து இதுபோல பல சமரசத்துக்கான சமிக்ஞைகள் காட்டப் பட்டிருக்கின்றன. அவற்றை தோல்வியின் விளைவாகக் கருதி மேலும் ஒரு தீர்வற்ற தீர்வின் மூலம் அவர்களை நிரந்தரமாகத் தோற்கடித்துவிட வேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் சிந்திப்பார்களாக இருந்தால் அது யுத்த வெற்றிவாதத்தின் பிந்திய வளர்ச்சிதான். 2009 மே மாதம் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட பின் அந்த வெற்றியை அடித்தளமாகக் கொண்டு ராஜபக்ஷ சகோதரர்களால் கட்டியெழுப்பப் பட்டதே வெற்றிவாதம். அதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களைத் தொடர்ந்தும் தோல்வியுற்ற ஒரு தரப்பாகவே பேணுவது என்று பொருள். அது . இனவாதத்தின் 2009க்குப் பின்னரான வளர்ச்சியாகக் காணப்பட்டது. ஆனால் ராஜபக்சக்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் தமிழ் மக்களை அவர்களுடைய ஆகக்குறைந்த பட்சக் கோரிக்கைகளையும் கைவிடுமாறு கேட்பது என்பது அதே வெற்றிவாதத்தின் தொடர்ச்சிதான். எதிர்த்துப்போராடும் சக்தியை இழந்த ஒரு மக்கள் கூட்டத்தின் தலையில் ஒரு அடிமட்டத் தீர்வைக் கட்டியடித்துவிடும் ஒரு முயற்சியே இது.

சமஸ்டி என்றால் அது பிரிவினை தான் என்று கூறுப்படுவதைப் பூமியிலுள்ள எந்தவொரு அரசறிவியல் நிபுணரும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. சமஸ்டி தொடர்பில் மனிதகுலத்தின் இதுவரையிலுமான திரட்டப்பட்ட அறிவுக்கு எதிராக சிங்கள மக்களும் அரசியல்வாதிகளும் சிந்திப்பதற்குக் காரணம் என்ன?

இது விடயத்தில் இரண்டு விளக்கங்களே உண்டு. ஒன்று- சிங்கள மக்கள் சமஸ்டியைப் பற்றி மிகப் பிழையான முற்கற்பிதங்களோடு காணப்படுகிறார்கள். இரண்டு- தமிழ் மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கையையும் நிராகரிப்பதன் மூலம் அவர்களுடைய கோரிக்கைகளை மேலும் கீழிறக்கலாம் என்ற ஓர் எதிர்பார்ப்பு. குறிப்பாக தமிழ்மக்களுடைய ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில் தமிழ்மக்களை ஆகக்குறைந்த பட்ச ஒரு தீர்வுக்குள் முடக்குவதன் மூலம் அவர்களைத் தொடர்ந்தும் தோல்வியுற்ற ஒரு மக்கள் கூட்டமாகவே பேண முற்படும் ஒரு சிந்தனைப் போக்கு.

ஆனால், மெய்யான சமாதானத்தில் வென்றவரும் இல்லை தோற்றவரும் இல்லை. இரண்டு தரப்புமே வெற்றி பெற்றதாக உணரவேண்டும். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதும் தமிழ்மக்களைத் தொடர்ந்தும் தோற்கடிக்கும் ஒரு முயற்சியாக அமையக்கூடாது. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தமிழ்மக்களின் ஆகக்குறைந்த பட்ச கோரிக்கையை நோக்கி சிங்கள பொது உளவியலை கனியச்செய்வதே இப்பொழுது தீர்வு யோசனைகளுக்கான ஒரே முன்நிபந்தனையாகும். நிலைமாறுகாலகட்ட நீதியை அதன் மெய்யான பொருளில் கட்டியெழுப்புவதற்கும் அது ஒன்றுதான் பொருத்தமான முன்நிபந்தனையாகும். அந்த நீதியிலிருந்தே நல்லிணக்கம் ஊற்றெடுக்க முடியும்.

எனவே சிங்களப் பொது உளவியலை ஒரு தீர்வை நோக்கி கனியவைக்க வேண்டும். அதாவது குடியானவர்களின் கருத்தைக் கேட்டால் மட்டும் போதாது. அவர்கள் மத்தியில் கருத்தை விதைக்க வேண்டும். கருத்தை உருவாக்க வேண்டும். அதைத் தனியே அரசியல்வாதிகள் மட்டும் செய்ய முடியாது. செயற்பாட்டாளர்களும், மகாசங்கத்தினரும், புத்திஜீவிகளும், ஊடகங்களும், படைப்பாளிகளும், ஏனைய கருத்துருவாக்கிகளும் தங்களுக்குரிய தளங்களில் அதை முன்னெடுக்க வேண்டும்.

இதுவிடயத்தில் சிங்கள அரசியல் வாதிகள் தமது அடிப்படை ஒழுக்கத்தையே மாற்ற வேண்டி இருக்கும். வாக்குவேட்டை அரசியலுக்காக சமஸ்டியை பிரிவினை-யாக்கி ஒரு பூதமாகச் சித்தரித்தது அவர்கள்தான். கடந்த பல தசாப்தங்களாக தமது வாக்காளர்களுக்கு அவர்கள் ஊட்டி வளர்த்த விசத்துக்கு முறிமருந்து கொடுக்க அவர்கள் தயாரா?

சிங்கள மக்களை ஒரு நீதியான தீர்வை நோக்கி கனியவைப்பது என்பது எல்லா விதத்திலும் சிங்கள இனவாதத்தைத் தோற்கடிப்பதுதான். சிங்கள இனவாதத்தைத் தோற்கடித்துவிட்டால் தமிழ்த் தேசிய அரசியலும் கூடிய பட்சம் மிதத்தன்மை மிக்கதாக மாறிவிடும். எனவே, அரசியலமைப்பு மாற்றங்களுக்காக குடியானவர்களிடம் கருத்துக்க ளைக் கேட்கும் நாடு அதற்கும் முதலாவதாக குடியானவர்களின் மத்தியில் கருத்தை உருவாக்க வேண்டும். குடியானவர்கள் மத்தியில் நிலவும் பிழையான முற்கற்பிதங்களை அகற்ற வேண்டும். சமஷ்ரிக்கோரிக்கை எனப்படுவது பிரிவினைக்கானது அல்ல. அது பிரிவினையைத் தவிர்ப்பதற்கானது என்பதை சிங்களக் குடியானவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலில் சிங்களத் தலைவர்கள் சமஸ்டியை ஏற்றுக்கொள்ளத் தயாராக வேண்டும்.


இந்த இடத்தில் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட கிளிநொச்சிக் கலந்துரையாடலில் கேட்கப்பட்ட ஒரு கேள்வியைச் சுட்டிக்காட்ட வேண்டும். "இப்போது உருவாக்கப்படும் அரசியலமைப்பை அடுத்த தேர்தலின் பின் வரும் அரசாங்கம் மாற்றாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? சில சமயம் ராஜபக்ச அணி மறுபடியும் ஆட்சியைக் கைப்பற்றினால் அவர்கள் அரசியலமைப்பை மாற்ற மாட்டார்களா?" என்று அதில் கலந்துகொண்ட ஒருவர் வளவாளர்களை நோக்கிக் கேட்டார். இக்கேள்விக்கு ஒரு சிங்கள வழக்கறிஞர் பதில் கூறினார். ராஜபக்சக்கள் மறுபடியும் வரமாட்டார்கள். நீங்கள் அவர்களை வர விடமாட்டீர்கள். நீங்களும், நாங்களும் சேர்ந்து அவர்களைத் தோற்கடித்தோம். இனியும் தோற்கடிப்போம் என்ற தொனிப்பட. ஆனால், ஒரு நீதியான தீர்வை நோக்கி சிங்களப் பொது உளவியலை கனியவைப்பது என்பது ராஜபக்சக்களைத் தோற்கடிப்பது மட்டுமல்ல. ராஜபக்சக்கள் மட்டும்தான் தமிழ்மக்களுடைய பிரச்சினைகள் என்பதல்ல. அவர்கள் ஒரு விளைவு மட்டுமே. ராஜபக்சக்களின் தோல்வி எனப்படுவது சிங்கள பௌத்த மேலாதிக்கவாதத்தின் தோல்வியும்தான் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மைத்திரி- ரணில் அரசாங்கத்திற்கு உண்டு. ஆனால் கடந்த ஓராண்டுகால ஆட்சியின் கீழான தமிழ் மக்களின் அனுபவம் எவ்வாறுள்ளது? சிங்கள பௌத்த மேலாண்மை வாதத்தைத் தோற்கடித்தால் மட்டுமே சிங்களப் பொது உளவியலைக் கனிய வைக்கலாம். அவ்வாறு சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைத் தோற்கடிப்பதற்கு சிங்களத் தலைவர்களும் செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும், மகா சங்கத்தவர்களும், ஊடகவியலாளர்களும், ஏனைய கருத்துருவாக்கிகளும் தயாரா? **தமிழ் குடியானவர்களின் ஆடுகளுக்கு புற்களைக் கொடுப்பார்களோ இல்லையோ குடியானவர்களுக்குப் பொய்களைக் கொடுக்க மாட்டோம் என்ற உத்தரவாதத்தைத் தர சிங்களத் தலைவர்கள் தயாரா? அல்லது இக் கட்டுரையை யாவும் கற்பனை என்று முடிக்க வேண்டியது தானா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புனித மாதங்கள்

## (அல் குர் ஆனின் விளக்கம்)



புனித மாதங்கள் நான்கு என இந்த வசனம் கூறுகின்றது. இந்தக் குறித்த மாதங்கள் போர் செய்யத் தடை செய்யப்பட்ட மாதங்களாகும்.

மக்கத்துக் காபிர்கள் முஹம்மத்(ச) அவர்களுடன் பத்து வருடங்கள் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்திருந்தனர். அந்த ஒப்பந்தத்தை அவர்களே முறித்தனர். அவர்களுக்கு எதிராக நபி(ச) அவர்கள் நடவடிக்கை எடுக்கும் போது கூட இந்த நான்கு மாத கால அவகாசத்தைக் கொடுத்தார்கள்.

"இணைவைப்பாளர்களில் யாருடன் நீங்கள் உடன்படிக்கை செய்தீர்களோ அவர்களிடமிருந்து அல்லாஹ்வும், அவனது தூதரும் விலகிக்கொள்ளும் (அறிவிப்பாகும்.)"

"எனவே நீங்கள் நான்கு மாதங்கள் இப்பூமியில் சுற்றித் [illegible]யுங்கள். நிச்சயமாக உங்களால் அல்லாஹ்வைத் தோற்கடிக்க முடியாது எ[illegible]தையும், நிச்சயமாக அல்லாஹ் இந்நிராகரிப்பாளர்களை இழிவுபடுத்துவான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்." (9:1-2)

எனவே, போர் செய்வது தடுக்கப்பட்ட [illegible]மாதத்தில் போர் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது என்பதில் நபி(ச) அவர்கள் மிகுந்த அக்கை[illegible]யைக் காட்டியுள்ளமையை அறியலாம்.

நபி(ச) அவர்கள் உளவு வேலைக்காக ஒரு குழு[illegible]வினரை மதீனா எல்லைக்கு அனுப்பினார்கள். அவர்கள் எதிரிகளைச் சந்தித்த போது போர் செய்வது தடுக்கப்பட்ட மாதத்தில் அவர்களுக்கு எதிராகத் தாக்குதல் நடாத்திவிட்டனர்.

தொடரும் .. ..

– இஸ்மையில் ஸலஃபி –

# ஜெபம்

## சிலநேரங்களில் குழந்தைகளும் சிறார்களும் ஏன் இறக்கின்றனர்?



பிறந்த எல்லாமே இறக்க வேண்டும் என்பது கடவுளின் நியதி. தீயது நினைக்காத, செய்யாத மரம் செடி, கொடி விலங்குகள் உட்பட அத்தனைக்கும் இது பொருந்தும். மனித உடல் இறந்தாலும் ஆன்மா இறப்பதில்லை என்பது கிறிஸ்தவ விசுவாசம். மனிதர் நோயினால், விபத்தினால், இயற்கையின் சீற்றத்தால் எப்படிவேண்டுமானாலும் இறக்கலாம். ஒருவரின் இறப்பை வைத்து வாழ்கையை நாம் தீர்ப்பிட இயலாது. ஒருசிலருக்கு 1 மாதமோ அல்லது 5 வருடமோ 50 வருடமோ அல்லது 100 வருடமோ கடவுள் கொடுக்கின்றார். இவ்வுலக வாழ்க்கை மிகவும் குறுகியது. கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் ஒவ்வொறு வினாடிக்கும் நாம் நன்றி செலுத்த வேண்டும். இவ்வுலக வாழ்கையே கதி என்றிறாமல் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்ற நேரத்தையும் வாய்ப்புக்களையும், திறமைகளையும், அருட்செல்வத்தையும் பொருள் செல்வத்தையும் பயன்படுத்தி விண்ணுலக செல்வத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். இவ்வுலக வாழ்கைக்குப் பின் நிலையான மறுஉலக வாழ்வு உண்டு. இறப்பு என்பது மறுஉலக வாழ்வின் பிறப்பு.

ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே. எனினும் நான் தொடர்ந்து வாழ்ந்தால் பயனுள்ள பணி செய்ய முடியும். எனவே நான் எதைத் தேர்ந்துகொள்வதென எனக்குத் தெரியவில்லை. இந்த இரண்டுக்குமிடையே ஒரு இழுபறி நிலையில் உள்ளேன். உயிர் நீத்துக் கிறிஸ்துவோடு இருக்க வேண்டும் என்னும் ஆவல் ஒரு புறம். - இதுவே மிகச் சிறந்தது. -



www.bible.me

# குறுக்கெழுத்து புதிர் 08

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | | ■ | 2 | | | 15 | |
| 3 | | | ன் | | | 4 | | |
| | | ■ | 16 | | | ■ | | ■ |
| | க | ■ | | ■ | 5 | | | ■ |
| ■ | | ■ | | ■ | ல | ■ | 6 | |
| 7 | | 17 | | ■ | | ■ | | ■ |
| | ம் | | 8 | | | ■ | 9 ரோ | |
| | ■ | 10 | ட் | | | ■ | ■ | ■ |
| | ■ | | | 11 | 12 | | 13 | |

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159இ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

1. பூக்களைக் கோர்த்தால் கிடைக்கும்
2. குளத்திலுள்ள சிவப்பு மலர் - ஒரு எழுத்து குழம்பியுள்ளது.
3. உலகினைக் கலைத்த அழகிகளில் ஒருவர்
4. யூலியட்டின் காதலி
5. இசையை உருவாக்கும் பானை
6. அணைந்ததாய் வெளியே தெரியும் நெருப்பு
7. இரவில் தங்கும் இடம்
8. இது போனால் உடல் உடலம் ஆகம்
9. இத்தாலியின் தலைநகரம்
10. மாவினால் செய்யப்படும் உணவு

முடிவுத் திகதி : 04.03.2016

11. அடுப்பு எரியாவிட்டால் இது வரும்
12. சிறையில் இருப்பவர்
13. முக்காலமும் உணர்ந்தவர்

### மேலிருந்து கீழாக

1. எறிந்தால் திரும்பிவரும் ஆயதம்
5. ஆணும் பெண்ணும் இணைவது
6. கறுப்பினத்தரவரைக் குறிக்கும் பொதுப் பெயர்
7. அங்குசத்தால் இதனை அடக்க முடியாது
8. காசு தேவைப்படும்போது கூறுவது
10. சமாதானத்தின் பறவை
12. திசையை அளக்கும் அளவீடு
14. பெண்களுக்கு இங்கும் புற்றுநொய் வரும்
15. செப்பை இப்படிச் சொல்லாம்
16. நாடுகளைத் கடக்கத் தேவையான புத்தகம்
17. மீட்டப்படும் வாத்தியம் - ஒரு எழுத்து குழம்பியுள்ளது

பரிசு பெறுபவர்கள்
எம்.பி.அகிலன். 30 கல்லூரி வீதி
ம.தன்யா. 32/4 மத்தியவீதி. உவர்மலை
எம்.பி.அகிலன். 30 கல்லூரி வீதி

### 07 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ந் | 23 த | ப் | 22 பு | 13 ர | ம் | ■ | 14 ஆ |
| ரி | 15 ர | வ | ■ | த் | வை | ■ | ■ | ட |
| 2 சி | ம | ம் | ம் | த | ■ | 16 ஆ | தா | ம் |
| ல | 3 பூ | சா | 17 ரி | க | 4 து | ந் | ரு | ப |
| ம் | ங் | ■ | ந | ங் | டு | 5 தை | 18 உ | ர |
| பு | 6 கா | 19 டு | ■ | 7 க | ட் | டு | ரை | ம் |
| ■ | ன | ட் | 8 க | ள் | வ | ன் | ■ | ■ |
| 9 தா | ம் | 20 பூ | ல | ம் | 10 செ | வ் | 21 வே | ல் |
| மு | 11 க | னை | க் | கு | ம் | 12 போ | ர் | ■ |

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

# இவ்வார இராசி பலன்


**மேஷம்** : மனதில் இருந்த கவலை மாறும். பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்று வீர்கள். எதிராக செயல்படுபவர்களிடமிருந்து விலகுவீர்கள். கடனை லெுத்துவீர்கள்.


**ரிஷபம்** : பேச்சில் நிதானமும், தெளிந்த சிந்தனையும் இருக்கும். அதி'டம் மிக்க வாரம் இதுவாகும். நிறைந்த பணவரவால் சேமிப்பு கூடும். உடல்நிலை பலம் பெறும்.


**மிதுனம்** : நல்லவர்களின் உதவி கிடைக்கும். புதிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.


**கடகம்** :சிலரது வற்புறுத்தலுக்காக, தொடர்பில்லாத பணியில் ஈடுபட வேண்டாம். உடல்நிலையில் கவனம் வேண்டும். வியாபாரம் செழித்து வளரஉழைப்பு உதவும்.


**சிம்மம்**: சிறு பணிகளிலும் மிகுந்த கவனம் செலுத்தி சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பேச்சாலேயே பிறரைக் கவர்ந்து காரியம் சாதிப்பீர்கள். வீடு, பணியிடம் மாறலாம்.


**கன்னி** : நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். தாமதமான செயல்களில் முன்னேற்றம் ஏற்படும். பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.


**துலாம்** :மதிநுட்பத் திறமையினால், பணிகளை நிறைவேற்றுவீர்கள். மருத்துவச் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் விற்பனை செழித்து லாபம் பெருகும்.


**விருச்சிகம்** :உறவினர்கள் தரும் ஆதரவு மனதிற்கு ஊக்கம் தரும். எதிரிகளால் வருகிற கெடுசெயலை முறியடிக்க சிரமப் பட வேண்டும். சுமாரான லாபம் இருக்கும்.


**தனுசு** : மனதில் உருவான திட்டத்தை செயல்படுத்த, புதிய வாய்ப்பு வரும். பணிகளில் ஒருமுகத்தன்மையுடன் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.


**மகரம்** :அறிமுகம் இல்லாத சிலரால், உதவி கிடைக்கும். முக்கியமான பணி சிறப்பாக நிறைவேறும். வியாபாரம் செழித்து, தாராள பணவரவு கிடைக்கும்.


**கும்பம்** :பணிகளை நிறைவேற்ற ஆர்வமுடன் செயல்படுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் வளர்ச்சி பெற, அனுகுமுறையை பின்பற்றுவீர்கள்.


**மீனம்** : சுய திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். பொது இடங்களில் தேவையில்லாமல் பேச வேண்டாம். வியாபாரம் செழித்து பணவரவு கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 18

01. கலகல, கமகம, சலசல
1. இணைமொழி 2. அடுக்கு மொழி 3. இரட்டைக் கிளவி

02. வருவான், கடித்தது, விளையாடினார்கள்
1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. அடைமொழி

03. இலங்கையில் அதிகளவு ஆதிவாசிகள் வாழ்ந்தமையால் அப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
1. முலிந்த 2. ஊவா 3. சபர 4. சப்பிரகமுவா

04. கையில் ஒட்டியுள்ள பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்கது எது?
1. சவர்க்காரம் 2. குளிர்நீர் 3. வெந்நீர் 4. மண்ணெய்

05. நிலத்துக்கு கீழேயுள்ள தண்டைக் கொண்ட தாவரம்?
1. இஞ்சி 2. மரவள்ளி 3. பலா 4. தீக்குறிஞ்சா

06. மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர் எது?
1. நாம்புவ 2. கரைவலை 3. மடி 4. அத்தாங்கு

07. பின்வருவனவற்றுள் மிக எளிதாக ஆவியாகக் கூடிய திரவம் எது?
1. டீசல் 2. ஓடிக்கொலோன் 3. நீர் 4. தேங்காயெண்ணெய்

08. 8கி.மீ நீளமான பாதையொன்றில் 250மீ இடைவெளிவிட்டு மின்கம்பங்கள் நடப்பட்டன. நடப்பட்ட மின் கம்பங்கள் எத்தனை?
1. 33 2. 34 3. 32 4. 35

09. 5மீ 40செ.மீ நீளமான ஒரு நாடாவில் இருந்து 260செ.மீ துண்டு வெட்டி எடுக்கப்பட்ட பின் எஞ்சியுள்ள நீளம்?
1. 280மீ 2. 2மீ 08செ.மீ 3. 2மீ 80 செ.மீ

10. கீழ்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும் எழுத்துக்கூட்டத்தை தெரிவு செய்க.
அ. பாடசாலை கொடி உயர்த்தப்பட்டு பாடசாலைக் கீதம் இசைத்தல்..
ஆ. வரவேற்புரை நிகழ்த்துதல்.
இ. முடிவுரை நிகழ்த்துதல்.
ஈ. குத்துவிளக்கு ஏற்றுதல்.
உ. நிகழ்ச்சிகள் இடம்பெறுதல்.
1. அஆஇஈஉ 2. அஈஆஉஇ 3. ஈஅஆஉஇ

11. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
பாட்டி கடைக்குச் சென்றார். மகன் அலுவலகத்துக்குச் சென்றார்.
பாட்டி : மகன் எனின், கடைக்கு : ................................
1. அலுவலகம் 2. அலுவலகத்துக்கு 3. கடைக்கு

12. ஒரு கிலோகிராம் வாழைப்பழத்தின் விலை ரூபா 80 ஆகும். 2 கிலோ 350கிராம் வாழைப்பழத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?
1. ரூ 180 2. ரூ 188 3. ரூ 189

13. உடல் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்கு செலுத்தும் உணவுச் சோடி
1. பசும் பாலும், சக்கரைப் பொங்கலும்
2. முட்டையும், கோதுமை மாவும்
3. பயறும், சோயாஅவரையும்
4. சோயா அவரையும், பசளியும்

14. எமது நாட்டின் பண்டைக்காலம் பற்றிய தகவல்களை அறிய உதவுவது எது?
1. திரிபீடகம் 2. உபநிடதம்
3. ஆரியவம்சம் 4. மகாவம்சம்

15. இந்தியாவிலுள்ள அஸந்தா ஓவியங்களுக்கு ஒப்பான கலைத்துவ படைப்புக்கள் கணப்படும் இடம் எது?
1. சிகிரியா 2. கிரிகொரங்க
3. தில்லானா 4. தேவிநுவட்ட



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



சிறுவர்களுக்கான குட்டிக் கதை



## எறும்பு தின்னது!?

ஒரு இனிப்பு கடைக்கார கிழவனுக்கு, சிறுவர்களைக் கண்டால் பிடிக்காது. அவர்கள் மீது எரிந்து விழுவான். அவர்களால் ஏதேனும் வேலை ஆக வேண்டி இருந்தால் அவர்களை அழைப்பான்.

இந்த வேலையை முடியுங்கள் இனிப்பு தருகிறேன்" என்பான். அவர்கள் அதைச் செய்து முடித்ததும் இனிப்பு தர மாட்டான். மாறாக, அவர்களை விரட்டி விடுவான். இதனால், சிறுவர்களுக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது. நண்பகல் நேரத்தில், கடைக்குள் படுத்துத் தூங்குவான். சிறுவனாக இருந்த அவன் மகன், அப்போதுதான் கடையைப் பார்த்துக் கொள்வான்.

ஒரு நாள் 30 பானைகளைக் கடைக்குள் எடுத்து வர வேண்டுமே... என்ன செய்வது என்று சிந்தித்தான் கடைக்காரன். வழக்கம் போலச் சிறுவர்களை ஏமாற்ற நினைத்தான்.

சிறுவர்களை அழைத்த அவன், மண்பாண்டம் செய்பவர்களிடம் முப்பது பானைகள் உள்ளன. அவற்றைக் கவனமாக எடுத்து வருகிறீர்களா? என்று கேட்டான்.

அப்படி நாங்கள் எடுத்து வந்தால் எல்லாருக்கும் நிறைய இனிப்பு தருவீர்களா? என்று கேட்டான் அவர்களில் ஒருவன். கொண்டு வாருங்கள். பிறகு பார்க்கலாம், என்றான் கடைக்காரன்.

நிறைய இனிப்பு கிடைக்கப் போகும் மகிழ்ச்சியில் ஒவ்வொரு பானையாக எல்லாவற்றையும் கொண்டு வந்து சேர்த்தனர்.

எங்களுக்குத் தருவதாகச் சொன்ன இனிப்பைத் தாருங்கள் என்றனர் சிறுவர்கள்.

நான் எப்போது உங்களுக்கு இனிப்பு தருவதாகச் சொன்னேன். பிறகு பார்க்கலாம் என்றுதானே சொன்னேன். இப்போதும் அதையேதான் சொல்கிறேன். பிறகு பார்க்கலாம், என்று அவர்களை விரட்டினான் கடைக்காரன்.

தாங்கள் ஏமாந்து விட்டதை எண்ணிப் புலம்பியபடியே அங்கிருந்து சென்றனர் சிறுவர்கள்.

அந்த வழியாக வந்த கோபால், ஏன் அழுது கொண்டே செல்கிறீர்கள்?"" என்று கேட்டார்.

கோபால் மாமா! அந்த இனிப்புக் கடைக்காரர் எங்களை ஏமாற்றிவிட்டார், என்று நடந்ததை எல்லாம் சிறுவர்கள் கூறினர்.

கவலை வேண்டாம்! உங்களுக்குக் கிடைக்க வேண்டிய இனிப்பிற்கு அதிகமாகவே கொண்டு வருகிறேன் என்ற கோபால் கடைக்குள் நுழைந்தார்.

அப்போது கடைக்காரனின் மகன்தான் கடையைக் கவனித்துக் கொண்டிருந்தான். இவனை எளிதாக ஏமாற்றலாம் என்று நினைத்த கோபால், இனிப்புப் பாத்திரத்திற்குள் கையை விட்டான். இனிப்புகளை எடுத்துச் சாப்பிட்டான். இதைப் பார்த்த சிறுவன், என்ன இனிப்பை எடுத்து சாப்பிடுகிறாய்? பணம் தராமல் எதையும் தொடக்கூடாது, என்று கத்தினான்.

தம்பி! உன் தந்தைக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் இப்படி இனிப்பை சாப்பிடுவதை அவர் பொருட்படுத்தமாட்டார். என் பெயர் எறும்பு. நீ வேண்டுமானால் அவரிடம் இனிப்பை நான் சாப்பிடுவதாகச் சொல் என்றான் கோபால்.

அப்பா! கடைக்குள் எறும்பு வந்துள்ளது. நான் சொல்லியும் கேளாமல் இனிப்பை எடுத்துச் சாப்பிடுகிறது, என்று கத்தினான் சிறுவன்.



ஏமாற்றுவோருக்கு பாடம் கற்பிக்க வேண்டும்.

தூக்கம் கலைந்ததால், எரிச்சல் அடைந்த கடைக்காரன், மகனே! எறும்பு வந்தால் விரட்டு... இல்லையேல் அதை அப்படியே விட்டுவிடு. எறும்பைச் சமாளிக்க உன்னால் முடியாதா? என்று கத்தினான். இதைக் கேட்ட கோபால் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். இனிப்பு நிறைந்திருந்த ஒரு பாத்திரத்தைத் தூக்கினான். சிறுவர்களுக்கு வழங்க இதுபோதும் என்று நினைத்து அங்கிருந்து புறப்பட்டான். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அவன், ""அப்பா நிறைய இனிப்புகளை எறும்பு எடுத்துச் செல்கிறது. பணம் ஏதும் தரவில்லை, என்று கத்தினான்.


இதைக் கேட்ட கடைக்காரன் கோபம் கொண்டான். எறும்பு இனிப்பை எடுத்துச் செல்வதற்காக, யாராவது கவலைப்படுவார்களா? போனால் போகட்டும் எவ்வளவு இனிப்பை எடுத்துச் சென்றுவிடப் போகிறது. பேசாமல் இரு, என்று கத்தினான். வெளியே வந்தான் கோபால். அங்கிருந்த சிறுவர்களுக்கு ஒன்றுக்கு இரண்டாக இனிப்புகளைத் தந்தான். அவர்களும் மகிழ்ச்சியாகச் சாப்பிட்டனர்.

தூக்கம் கலைந்து எழுந்த கிழவன், விஷயம் அறிந்ததும் குய்யோ, முய்யோ என கத்தினான். யார் அந்த எறும்பு என்று தெரியாமல் நொந்து போனான்.

சிந்திக்க

**பல வெற்றிகளைக் கண்டவன் மனது :**
**பூவைப் போல் மென்மையாகும்.**
**பல தோல்விகளைக் கண்டவன் மனது**
**இரும்பைப் போல் வலிமை பெறும்.**

மலைமுரசு



**பாராட்டு பெறுவோர்**
*கு.ஜெகு குரூஸ், பாலையூற்று, திருகோணமலை*
*எம்.எச்.அபீப், 102, ஜமாலியா, திருகோணமலை*

தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

*அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. வட்டமொன்றின் மிகப்பெரிய நாணின் நீளம் 6செ.மீ எனின், அவ்வட்டத்தின் ஆரையைக் காண்க?

02. காரணி காண்க? 1. $x^2 - 5x - 14$    2. $9x^2 - 12x + 4$

03. காரணி அறிவைப் பயன்படுத்தி சுருக்குக. $98^2 - (5 \times 98) - 6$

04. மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தாது x இன் பெறுமானத்தைக் காண்க?
$\log 12 + 3\log x + 2\log 18$

05. மடக்கை அட்டவணையை பயன்படுத்தி தீர்க்கவும்
1. $486^2$    2. $1203^2$    3. $0.00345^2$

06. பெறுமானம் காண்க. 1- 0.0001    07. ரூ5200 இன் 35% எவ்வளவு?

08. 4 வேலையாட்களுக்கு ஒரு வேலையைச் செய்ய 12 நாட்கள் எடுத்தது. அதே வேலையின் அரைப்பங்கை 3 நாட்களில் முடிக்க எத்தனை வேலையாட்கள் தேவை?

09. $\lg 2 = 0.3010$, $\lg 3 = 0.4771$ எனின், $\lg 0.6$ ன் பெறுமானத்தைக் காண்க.

10. $r = 7\,cm$, $h = 12\,cm$ எனின், உருளையின் வளைந்த மேற்பரப்பளவைக் காண்க.

11. ஒரு திண்ம அரைக் கோளத்தின் மேற்பரப்பளவு $462cm^2$ எனின், அதன்ஆரையைக் காண்க.

## பாடம் : வரலாறு

01.
1) பிரித்தானியரின் கீழ் இலங்கையின் கடற்கரை மாகாணங்களில் ஆட்சிக்காக நியமிக்கப்பட்ட 1வது ஆளுனர் யார்?
2) 1848 சுதந்திரப் போராட்டத்திற்காக இரு காரணிகளை குறிப்பிட்டு விளக்குக?
3) மறுமலர்ச்சி காலத்திற் மாட்டின்லூதருடன் தொடர்புடைய துறைகளை குறிப்பிட்டு விளக்குக?
4) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட மூன்று விளைவுகளை மதிப்பிடுக?
5) ஏகாதிபத்தியம் என்றால் என்ன?

02.
1) ஐம்பெரும் விவாதங்கள் நடைபெற்ற இடங்கள் எவை?
2) கண்டி இராசதானியின் பொருளாதாரத்துறையில் காணப்பட்ட விசேட பண்புகளை குறிப்பிட்டு விளக்குக?
3) வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களுள் கல்வெட்டுக்கள் நாணயங்கள்
பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க?
4) 1818 ஆம் ஆண்டு போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக?
5) கோல்புறூக் சீர்திருத்தங்களின் முக்கியமான அம்சங்களை குறிப்பிட்டு விளக்குக?

03.
1) 1ம் விஜயபாகு மன்னனின் வெளிநாட்டுக்கொள்கைகள் 5 தருக?
2) துலாபாரம் என்றால் என்ன?
3) இலங்கையின் மயானபூமி என அழைக்கப்படும் இடம் எது?
4) தெவனகல கல்வெட்டு அமைந்துள்ள இடம் எது?

ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

***Select the correct phrase from the box and complete the notice.***

1. ..........................................
Reduce your speed

2. ..........................................
Do not use horns

3. ..........................................
Put on your seat belt

4. ..........................................
Let's stand up now

5. ..........................................
Let's worship

6. ..........................................
Keep an umbrella with you

a. The flight is going to take off    b. In rainy season
c. Pedestrian crossing ahead    d. Hospital ahead
e. National anthem is going to be sung    f. In a temple

***Fill in the blanks***

1. a _ ba _ _ ado _    2. Bu _ _ hi _ _    3. hi _ _ ory    4. a _ _ ient

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

**பகுதி (முதனிலை)**

தெரிநிலைப் பகுபதங்களுக்குப் பெரும்பாலும் நட வா முதலிய வினைச்சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாக வரும். தேரிநிலை வினைப்பகுதிகள் எப்போதும் ஏவல் வடிவிலேயே வரும்.

- நடந்தான் - பகுதி - நட (வினையடி)
- சித்திரித்தான் - பகுதி - சித்திரம் (பெயரடி)
- (பொன்) போன்றான் - பகுதி - போல் (இடையடி)
- சான்றான் - பகுதி - சால் (உரியடி)

தெரிநிலை வினைப்பகுதிகள் வி, பி முதலிய விகுதி பெற்றேனும் விகாரப்பட்டேனும் பிறவினைப் பகுதிகளாய் வரும்.
எடுத்துக்காட்டு:

- செய்வித்தான் - பகுதி - செய்வி (செய்+வி)
- நடப்பித்தான் - பகுதி - நடப்பி (நட+பி)
- திருத்தினான் - பகுதி - திருத்து (திருந்து)
- தேற்றினான் - பகுதி - தேற்று (தேறு)

செய்வினை வடிவம் செயற்பாட்டு வினை வடிவத்தைப் பெற்றும் தெரிநிலை வினைச்சொல்லின் பகுதியாக வருவதுமுண்டு.

- தேடப்பட்டான் - தேடப்படு
- அடியுண்டான் - அடியுண்
- முடிக்கப்பட்டது- முடிக்கப்படு

தற்காலத் தமிழில் வழங்கும் தெரிநிலை வினைச்சொற்கள் பலவற்றின் பகுதிகள் கூட்டுவினைப் பகுதிகள் என்று கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டு ஓடிக்கொண்டிருந்திருப்பான் என்ற வினைச் சொல்லின் பகுதி ஓடிக்கொண்டிருந்திரு என்பதாகும். இக்கூட்டு வினைப்பகுதி யில் ஓடு என்ற அடிப்படை வினையோடு பல ஒட்டுக்கள் அமைந்துள்ளன.

**விகுதி**

விகுதி என்பது பகுபதங்களின் இறுதியிலே வந்து திணை பால் எண் இடம் என்பனவற்றையோ ஏவல் வியங்கோள் முதலான பொருள்களையோ உணர்த்தி நிற்கும் ஒரு சொல்லாக்கக்கூறு ஆகும்.

பெயர் விகுதிகள் : குழையன் (அன்) கோமான் (மான்)
வானத்தான் (ஆன்) பிறன் (ன்)
குழையர் (அர்)



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

### கட்டுரை வினாக்கள்

01.
**A.** முள்ளந்தண்டுள்ள விலங்குகள், முலையூட்டிகள், பறவைகள், ஊர்வன, ஈருடக வாழிகள், மீன்கள், அனலிடாக்கள், மொலஸ்காக்கள், ஆத்திரப்போடாக்கள் போன்றவற்றை கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(1) தசைச்செறிவான பாதத்தைக் கொண்டு காணப்படுபவை எவை?
(2) இலங்கையில் தற்போது அருகிவரும் விலங்குகளில் வண்ணத்துப்பூச்சி, யானை, ஆமை போன்றனவும் அடங்கும். இவைகள் முறையே குறிக்கும் கூட்டங்கள் எவை?
(3) மண்புழுக்கள் எதை உணவாக உட்கொள்கின்றன?
(4) மனிதனின் தலையீட்டின் விளைவாக இலங்கையில் பல விலங்கினங்கள் அழிந்து போகும் ஆபத்துள்ளது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விளக்குக.
(5) விலங்கு இராட்சியத்தில் அதிக எண்ணிக்கையைக் கொண்ட அங்கிகள் காணப்படும் கூட்டம் எது?

**B.** (1) வித்து மூடியுளித் தாவரம் என்றால் என்ன?
(2) வித்து மூடியிலித் தாவரம் என்றால் என்ன?
(3) வித்திகளைத் தோற்றுவிக்கும் தாவரங்கள் எவை?
(4) ஒரு வித்திலைத் தாவரத்திற்கும் இருவித்திலைத் தாவரத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் 4 தருக.
(5) வித்துப்பரம்பல் அடையும் வழிமுறைகளை தந்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

ஆசிரியர் . திரு.த.சேகரன்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்குகிழக்கு ....

கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் நாங்கள் சமஸ்டி, கூட்டாட்சி போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் தொடர்பாகப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அதனை எப்படியும் அழைக்கலாம். ஆனால் வடக்கும்கிழக்கும் முஸ்லிம்களின் அபிவிருத்திக்கும் பாதுகாப்பிற்கும் உகந்த இடமாக இருக்க வேண்டும் அத்துடன் தமிழ் மக்களின் கோரிக்கைகளைப் போரினால் அழிவுற்றவர்கள் என்றவகையில் தீர்வொன்றுக்காகக் கருத்திற்- கொள்ளும் போது கிழக்கில் வாழும் முஸ்லிம்களையும் கருத்திற்கொண்டு வடக்குகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் தனியானதொரு சமூகமாகக் கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் தீர்வுச் செயன்முறையின் போது முஸ்லிம்கள் சம அந்தஸ்துக்கொண்ட உரிமையாளர்களாக அத்தீர்வுச் செயன்முறையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இத்தகையதொரு பார்வையில் கூட்டாட்சியா சமஸ்டியா என்பது முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் முக்கியமற்றதொரு சொல்லாடலாகவே இருக்கும். எமது பிரதான வேண்டுகோள் முஸ்லிம்கள் தனியொரு சமூகமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதே! என அவர் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கத்தளம்...

இராணுவத் தளங்களை உள்ளடக் - கியதாக ஒரு அமெரிக்கத் தளத்தை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக, அதுல் கெசாப் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

வெளிநாட்டவர்களுக்கு 99 ஆண்டு குத்தகைக்கு காணிகளை வழங்குவது போன்ற தவறான கொள்கைகள் அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்டால், மீண்டும் சிறிலங்கா ஒரு காலனித்துவ நாடாக மாறும் ஆபத்து உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்திய மசகு எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஒயில் கோப்பரேசன் திருகோணமலையில் வலுவாககத் தனது கால்களைப் பதித்துள்ள நிலையில் அமெரிக்காவும் இவ்வாறான முயற்சியொன்றை முன்னெடுத்திருப்பதாக பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.ஒயில்

## நடமாடும் சேவை

திருமலையில் நிலவிவரும் குடிநீர்ப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நடமாடும் சேவை மார்ச் மாதம் 02ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

காலை 9.00 முதல் மாலை 5.00 மணிவரை மாகாண நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதேச சேவை நிலையத்தில் இந்த நடமாடும் சேவை நடைபெறும்

### தலைமன்னார்...

குறிப்பிடத்தக்கது.

சுமார் 3.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் இத்திட்டம் உருவாகவுள்ளது.

கடந்த வருடத்தின் இறுதிப் - பகுதியில் இத்திட்டத்திற்கான சாத்தியப்பாட்டு அறிக்கையைத் தயாரிக்கும் ஆய்வுகளில் இந்திய அரசாங்கம் ஈடுபடத் தொடங்கி - யுள்ளது. இருநாட்டு உறவுகளின் வளர்ச்சிப் பாதையை மிகத் தெளிவாக இந்த தெருப் போக்குவரத்து செப்பனிட இருப்பதாக இருநாட்டு இராச தந்திரிகளும் தெரிவித்துள்ளனர்.

பாக்கு நீரிணை ஊடாக பாதைப் போக்குவரத்தையும், அத்துடன் இணைந்த வகையில் நீருக்கடியில் கப்பல்கள் போக்குவரவு செய்யத்தக்க வகையிலான சுரங்கப் பாதையமைப்பு ஆகியவற்றையும் கொண்டதாக இத்திட்டம் அமையும் என நம்பத்தகு வட்டாரங்களில் இருந்து தகவல்களைப் பெற்றிருப்பதாக "பைனாசியல் ரிவியூ" தகவல் வெளியிட் -டுள்ளது.

அமைச்சர் கட்காரி மேலும் தெரிவிக்கையில் இந்தியத் தனுஸ்கோடிக்கும் சிறீலங்காத் தலைமன்னாருக்கும் இடையி -லான தூரம் வெறும் 29 கிலோ மீற்றர்களே எனத் தெரிவித்திருப்பதுடன் இராமேஸ்வரத்தில் இருந்து மேம்பாலம் அமைப்பது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருடன் கலந்துரையாடி யிருப்பதாகவும் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### திருகோணமலை...

அமைப்புக்களும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு தொண்டு நிறுவனங்களும் இத்திட்டத்திற்கு மாற்று வழிகளைத் தேடுமாறு கோரிக்கை விடுத்திருந்தன.

எனினும் பொது அமைப்புக்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு அளித்திருப் -பதாக அமைச்சர் தெரிவித்திருப்பது எந்தப் பொது அமைப்புக்களை அவர் கருத்திற் கொண்டுள்ளார் என்ற ஐயத்தை எழுப்புவதாக சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தெரிவித்து- ள்ளனர்.

சம்பூரில் 500 ஏக்கர் பரப்பளவு நிலத்தில், இந்த அனல் மின் நிலையம் 600 மில்லியன் டொலர் செலவில் கட்டப்படும்.

தலா 250 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்டதாக இரண்டு கட்டங்களாக இந்த 500 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம், அமைக்கப்- படவுள்ளது.

### ஹரிஸ்ணவி....

அத்துடன் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி எதிர்வரும் திங்கட்கிழமை கிழக்கு மாகாண ஆளுநருக்கு மகஜரொன்றினை வழங்கவுள்ளதாகவும் திருகோண - மலை மாவட்ட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார்.

### முஸ்லிம்களுக்கு...

கைவிடப் போவதில்லை என அவர் அங்கு தெரிவித்திருப்பதானது சர்சைக்குரியதொன்றாகவே ஆய்வா - ளர்களால் நோக்கப்பட்டுள்ளது.

கொழும்பு டெலிகிராப் ஆங்கில இணையத்தளத்திற்கு தனது கருத்தைப் பதிந்துள்ள லத்தீப் பாருக் என்ற ஆய்வாளர் "மறுபேச்சின்றி மறுக்கப்படவேண்டிய வேண்டுகோள்" பசீர் சேகுதாவூத்தினுடையது எனத் தெரிவித்திருப்பதுடன் ஸ்ரீலங்காவில் வாழும் முஸ்லிம்கள் அனைவருமே இம் முன்மொழிவை மறுபேச்சின்றி மறுத்திருப்பதாகவும் தெரிவித்து - ள்ளார்.

"முன்னாள் தகவல்தொடர்புத்துறை அமைச்சர் பாக்கீர் மாக்கார் சரியாகத் தெரிவித்தது போல இக் கோரிக்கை - யானது காலம் தவறிப் பிறந்திருப் - பதுடன், தேவையற்றதொரு கோரிக்கையாக இருப்பதுடன், தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைக்குச் சற்றேனும் பொருத்த - மற்றது" என்றும் ஆய்வாளர் லத்தீவ் தெரிவித்துள்ளார்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வருடாந்த மாநாடு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய இருகட்சிகளினதும் இணைந்த வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 27-2-2016 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் நல்லூர் கட்டநாதர் சிவன்கோவில் வீதியில் அமைந்துள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

## கொக்கட்டிச்சேனை மக்களே வெளியேறுங்கள்



**வடமலை ராஜ்குமார்**

(தமிழ்மிரருக்கு எழுதிய கட்டுரை)

நீண்டகால அகதி வாழ்விலிருந்து மீண்டு தற்போது சொந்த மண்ணில் சுயதொழில் செய்துவரும் சம்பூர் கொக்கட்டிச்சேனை மக்களை இம்மாதம் 29ஆம் திகதிக்கு முன் வெளியேறுமாறு மூதூர் பிரதேச செயலகம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, தமது காணிப் பிணக்கை தீர்க்குமாறு கோரி கிழக்கு மாகாண கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சி.தண்டாயுதபாணியிடம் கொக்கட்டிச்சேனை மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை கடிதமொன்றைக் கையளித்துள்ளனர்.

"சம்பூர் கிராம அலுவலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் நாங்கள், தொழில் நிமித்தம் சம்பூரிலிருந்து நவரெத்தினபுரம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச்சேனை கிராமத்தில் கடந்த 30 வருடகாலமாக ஜீவனோபாய தொழில் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்நிலையில் கடந்த 10 வருட காலமாக முகாம் வாழ்க்கையை அனுபவித்த நாங்கள், எங்களது குடும்பத்தின் வாழ்வாராத ஜீவனோபாய தொழில் செய்துவரும் காணியை விட்டு வெளியேறுமாறு மூதூர் பிரதேச செயலகம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

"காணியை விட்டு வெளியேற்றல்" என தலைப்பிட்டு சட்டவிரோதமாக அத்துமீறி குடியிருப்பதால் 2016.02.29 ஆம் திகதிக்கு முன் காணிகளை விட்டு வெளியேறுமாறும் இல்லையேல், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மூதூர் பிரதேச செயலாளரினால் 2016.02.16 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் 18.02.2016 திகதி தபால் மூலம் எமக்குக் கிடைக்கப்பெற்றது.

ஆனால் பல்லாண்டு வாழ்வியல் அடையாளங்களான பனைமரங்கள், கிணறுகள், வழிபாட்டு இடங்கள், என்பவற்றைக் கொண்ட இங்குள்ள காணிகளில் பெரும்பாலானவை தலைமுறை தலைமுறையாக கைமாற்றப்பட்டு இன்றுவரை வந்துள்ளதுடன், இங்கு வாழும் குறிப்பிட்ட மக்களிடம் அனுமதிப் பத்திரங்கள், அளிப்புக்கள் இருப்பது டன், பலரது அனுமதிப்பத்திரங்கள் வன்செயலின் போது இடம்பெயர்வின் காரணமாக அழிக்கப்பட்ட நிலையில் புதிதாக விண்ணப்பித்தவர்களும் உண்டு.

கடந்த 1985, 1990 காலங்களில் உக்கிரமடைந்திருந்த யுத்த சூழலில் இங்கு வாழ்ந்த மக்களாகிய நாம் சம்பூருக்கும் கொக்கட்டிக்கும் ஆக மாறி மாறி வாழவேண்டியவர்களாய் இருந்தது.

கடந்த 2006 இடப்பெயர்வுடன் முழுமையாக இடம்பெயர்ந்தோம். ஆனால் 2013 இல் எமது அயல் கிராமமான நவரெத்தினபுரம் மீள்குடியேற்றப்பட்டது. குறித்த கிராம அலுவலர் பிரிவில் எமது வாழ்வாதாரக் காணி அமையப்பெற்று இருப்பதால், நாம் இடம்பெயர்ந்து முகாமில் இருந்த நிலையில், 2006ஆம் ஆண்டிற்கு முன்னர் ஜீவனோபாய தொழிலினை இன்றுவரை மேற்கொண்டு வந்தோம். கால்நடைகள், சேனைப்பயிர்கள், மரக்கறித் தோட்டங்கள் மற்றும் நெல்வயல்கள் என கொக்கட்டிக் கிராமம் மீள வளமாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மாகாண ஒதுக்கீட்டு நிதியில் சம்பூரில் இருந்து கொக்கட்டிக்கான பாதை புனரமைக் - கப்பட்டும் விவசாயத் திணைக்கள நிதியில் கொக்கட்டிக்குளம் புனரமைக்கப்பட்டும் உள்ளது.

2013ல் நவரெத்தினபுரம் கிராமம் மீளக்குடியேற்றப்பட்ட நாள் முதல் அங்கு குடிசைகள் அமைத்து சேனைகள் செய்து கால்நடைகளுக்கான பட்டிகள் அமைத்து பழைய ஆலயத்தை மீள துப்பரவு செய்தபோது எவராலும் எந்த தடை உத்தரவுகளும் பிறப்பிக்கப் - படவில்லை.

பாமர மக்களின் மனங்களைப் - புரிந்து கொண்டு நல்லாட்சி நடத்தும் இவ் ஆட்சிக் காலத்தில் எமது நிர்க்கதியான இன்னிலையை கருத்திற்கொண்டு எமது பாரம்பரிய - மானதும் பூர்வீகமானதும் வளமானதுமான கொக்கட்டிச்சேனை வாழ்வாதாரக் காணியை மீட்டுத் - தருவதற்கான நடவடிக்கைகளை எடுத்துத் தருமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்" என அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## சமையல் சமையல்

## இறால் வறுவல்

### தேவையான பொருட்கள்

இறால் - கால் கிலோ, வெங்காயம் நறுக்கியது – 2, பூண்டு - 10 பல், இஞ்சி - ஒரு துண்டு, சீரகம் - 1 கரண்டி, தக்காளி – 2, தேங்காய் துருவியது - கால் மூடி, காய்ந்த மிளகாய் - 10, உப்பு - தேவையான அளவு, மஞ்சள் தூள் - கால் கரண்டி, எண்ணெய் - தேவையான அளவு, கறிவேப்பிலை - சிறிதளவு

### செய்முறை



இறாலை நன்கு கழுவி சுத்தம் செய்து கொள்ளவும். பின்னர் பூண்டையும் இஞ்சியையும் நன்கு அரைத்துக் கொள்ளவும். தேங்காய் துருவலை காய்ந்த மிளகாய் சீரகத்துடன் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

தாச்சியில் தேவையான அளவு எண்ணை விட்டு வெங்காயமும், கறிவேப்பிலையும் போட்டு நன்கு வதக்கவும்.

வெங்காயம் பொன்னிறத்துக்கு வந்தபின் தக்காளியை போட்டு வதக்கவும். பின் அதனுடன் இறாலை இட்டு வதக்கி அரைத்து வைத்துள்ள பூண்டு இஞ்சி விழுதையும் வதக்கி அதனுடன் அரைத்த தேங்காய் விழுது சேர்த்து சிறிதளவு தண்ணீர் ஊற்றி நன்கு கொதிக்க விடவும்.

கொதித்தவுடன் மசாலா கெட்டியாகி இறால் வெந்தவுடன் இறக்கி கறிவேப்பிலை தூவி இறக்கவும்.

## தற்கொலை என்பது மன நோயா??!!

புகழின் உச்சியில் இருந்து விட்டுப் பின்னர், தோல்விகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் துவண்டு, தற்கொலை செய்து கொள்வது மர்லின் மன்ரோ முதல் சில்க் ஸ்மிதா வரை பொதுவானது.

குழந்தையைக் காணவில்லை என்ற வருத்தத்தில், உயரத்திலிருந்து கீழே குதித்து, அதிர்ஷ்டவசமாகத் தப்பித்த ஒரு பெண், ஒரு மைக்ரோ செகண்டில் ஏதோ ஒன்று என்னைக் குதிக்கச் சொல்லியது என்றாள் ! அந்தநொடியைத் தாண்டிவிட்டால், திரும்ப தற்கொலை எண்ணம் வருவது அரிது.

மன அழுத்தம், பைபோலார் டிஸார்டர், போதைப் பொருள் பழக்கம், மரபு வழி மனப்பிறழ்வுகள் எனப் பல காரணங்கள் தற்கொலையைத் தூண்டுகின்றன.

காரணம் ஏதுமின்றி செத்துப் போயிடலாம் என்று தோன்றுகிறது டாக்டர் என்று ஒருவர் சொன்னால், மரபுவழி மன அழுத்தத்தின் உச்சக்கட்ட எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு உடனே சிகிச்சை அளிக்கவேண்டும் –தவறினால் மறுநாள் அபாயம் அதிகம்.

சாவைப் பற்றி அதிகம் பேசுவது, எழுதுவது, கத்தி, அறுவாள் போன்ற ஆயுதங்களைத் தேடி வைத்துக் கொள்வது, சில மருந்து வகைகளைச் சேர்த்து வைத்துக் கொள்வது - இவை தற்கொலை முயற்சிக்கு ஆரம்ப நிலையாக இருக்கக் கூடும்.

தீரா வியாதிகள் - கேன்சர், தாளமுடியாத வலி, போன்றநோய்கள் ஒருவரை விரக்தி அடையச் செய்து, தற்கொலையில் முடியலாம்.

தற்கொலை தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றுதான் - தவிர்க்க முடியாத மனநிலையில், திடீரென்று தோன்றும் மனப்பிறழ்வுகளை இனங்கண்டு சிகிச்சை அளிப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. சிலர், தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பர் - நிச்சயம் இறக்க மாட்டோம் என்று தெரிந்தும், மற்றவர்களைத் தன் நோக்கித் திருப்பும் முயற்சியாக இதனைச் செய்யக் கூடும். இறந்தவர் விடுபட்டு விடுகிறார், இருப்பவர்கள் தான், அதன் வேதனையையும், வருத்தத்தையும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

முற்றும்...

## கருவிலிருந்து குழந்தையாக .. ..

கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு தன் வயிற்றில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ள ஆவலாக இருக்கும். ஒவ்வொரு மாதமும் அவர்களுடைய எதிர்பார்ப்பும் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.



### 8 வது வாரத்தில்

குழந்தையின் கண்கள் மற்றும் காதுகள் வளர ஆரம்பிக்கும், 2 செ.மீ நீளத்தில் இருக்கும்.

### 12 வது வாரத்தில்

5 செ.மீ நீளம் இருக்கும், குழந்தை முழு வடிவம் பெற்று அழகான கைகள், கால்கள் உருவாகி இருக்கும். இந்த வாரத்திற்கு பின்பே குழந்தை ஆணா, பெண்ணா என்பதை கண்டறிய முடியும், மர்ம உறுப்புகள் 9வது வாரத்தில் தொடங்கி 12வது வாரத்தில் முழுவதுமாக வளர்ச்சி அடைந்திருக்கும்.

### 20 வது வாரத்தில்

இக்கால கட்டத்தில் குழந்தை 18 செ.மீ நீளம் இருக்கும், அசைவுகளும் நன்றாக தெரியும். புருவம் மற்றும் நகங்கள் வளர்ச்சி அடைந்திருக்கும்.

### 24 வது வாரத்தில்

குழந்தையின் கேட்கும் திறன் அதிகரிப்பதோடு, பதிலளிக்கவும் தொடங்கும். முகம், உறுப்புகள் நன்கு வளர்ச்சியடைந்து முழுமையான வடிவம் பெறும்.

### 28 வது வாரத்தில்

குழந்தையால் சுவாசிக்க முடியும், வாசனையையும் நுகர முடியும்.

### 32 வது வாரத்தில்

கண்களை திறந்து பார்க்கும், தலைகீழாக திரும்பி வரும், முக்கியமாக நன்றாக கை, கால்களை அசைக்க ஆரம்பிக்கும்.

### 40 வது வாரத்தில்

குழந்தை வெளியே வருவதற்கு தயாரான நிலையில் இருக்கும், எடை 2- 4 கிலோ வரை இருக்கும்.

## அடிக்கடி நீர் கோர்க்கின்றதா??

தொடர்ந்து தலைக்கு குளிப்பதாலும் மழையில் நீண்ட நேரம் நனைவதாலும் தலையில் நீர் கோர்த்துக் கொள்கிறது. நோய் எதிர்ப்பு சக்தி இன்மை, புகை மற்றும் காற்று மாசடைந்த இடங்களில் நீண்ட நேரம் இருப்பதாலும் தலையில் நீர் கோர்த்துக் கொள்கிறது.



தலையில் நீர் கோர்த்துக் கொள்ளும்போது மூக்கடைப்பு, தலைபாரம், இருமல், சளித்தொல்லை போன்றவற்றோடு தொடர் தும்மலும் வரக்கூடும். தலையில் நீர் கோர்த்துக் கொள்வதால் மூளைக்கு செல்லும் நரம்புகள் பாதிப்புக்கு உள்ளாகும் ஆபத்து உள்ளது.

இதனால் உடலின் உள்ளுறுப்புகள் செயலிழக்க நேரிடும். எனவே, தலையில் அதிகமான நீர் தங்குவதால் ஏற்படும் சைனஸ், தொடர் தும்மல், இருமல் போன்ற பிரச்சினை உள்ளவர்களுக்கு சரியான தூக்கம் அவசியம்.

இவர்கள் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் அவசியம். பொரித்த உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

### நீர்கோர்க்காமல் இருக்க சூப்பர் வழிகள்

தலையை காய வைத்ததும் நீர்கோர்த்து கொண்டிருந்தால் கொதிக்கும் நீரில் நுணா இலை, நொச்சி இலை, எருக்கம் இலை போட்டு வேது (ஆவி) பிடிக்கலாம்.

கொதிக்கும் நீரில் செங்கல் போட்டு, அந்த ஆவியை நன்கு முகர்ந்து உள்ளிழுக்கலாம் அல்லது நீட்டு மஞ்சள் தீயில் காண்பித்து முகரலாம்.




## அழகாய்த் திகழ சில டிப்ஸ்

**செயற்கை பொருட்களை விடுத்து வீட்டில் காணப்படும் பொருட்களை வைத்தே சிக்கனமான முறையில் அழகைப் பெற்றுக் கொள்ள சில டிப்ஸ் :**

அழகு குறிப்பு

- தினமும் காலை, மாலை வேளைகளில் 5 நிமிடம் மூச்சுப்பயிற்சி செய்து வந்தால் அன்றைய தினம் முழுவதும் முகப் பொலிவோடு காணப்படுவீர்கள்.



- தினமும் காலையில் எழுந்ததும் ஒரு லிட்டர் தண்ணீர் குடித்து வந்தால் அன்றைய நாள் முழுவதும் சுறுசுறுப் பாகவும் முகப் பொலிவுடனும் காணப்படலாம்.
- தினமும் காலையில் ஆப்பிள், ஆரஞ்சு, பப்பாளிப் பழங்கள் சாப்பிடுவது இளமையை அதிகரிக்கும். தினமும் காலையில் ஒன்று அல்லது இரண்டு கரட்டை பச்சையாக சாப்பிட்டு வந்தால் உடலில் ஒருவித மினுமினுப்பை பெறலாம்.
- கறிவேப்பிலையின் இளம் தளிர்களை காய வைத்து பொடியாக்கி, அதை தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தேய்த்து வந்தால் முடி கருகருவென்று வளரும்.
- தயிருடன் கடலை மாவு சேர்த்து முகத்தில் தடவி வந்தால் முகப்பரு தொல்லை வராது.
- 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை முல்தான் மெட்டியுடன் பன்னீர் கலந்து முகத்தில் பூசி வந்தால் முகம் பளிச்சென்று காணப்படும்.
- பப்பாளி வயிற்றுக்கோளாறுக்கு மருந்தாகப் பயன்படுகிறது, செரிமானத்தை ஊக்குவிக்கிறது, பப்பாளிக் காயின் பால் வயிற்றில் உள்ள பூச்சிகளை அகற்றுகிறது. பப்பாளி தோலில் உள்ள மருக்கள் மற்றும் கரும் புள்ளிகளை நீக்குகிறது.

## சிரியுங்கோவன்...



உண்மைக்கு எதிர்பதம் என்னனு கேட்டதக்கு உங்கப் பையனுக்கு பதில் சொல்ல தெரியலை மேடம்!

அவனுக்கு பொய் சொல்லவே தெரியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

விளையாட்டு முரசு

## 9ஆவது தேசிய சாரணர் ஜம்போறி





இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வி அமைச்சின் அனுசரணையில் 9 ஆவது தேசிய சாரணர் ஜம்போறி, கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் முதல் யாழில் நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, முனீஸ்வரன் ஆலய வளாகம், மாநகர சபை மைதானம், கோட்டைப் பகுதி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் இந்த ஜம்போறி, நேற்று 26 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் இலங்கையைச் சேர்ந்த மற்றும் வெளிநாடுகளிலிருந்து சுமார் 10 ஆயிரம் சாரணர்கள் வருகை தந்திருந்தனர். 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சாரணர்களால் அமைக்கப்பட்ட ஜம்போறி முகாம்களை, கடந்த 22 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆபத்துக்கள் அற்ற ஒலிம்பிக்

ஒலிம்பிக்

சீகா ஆபத்து ஏற்பட்டுள்ள போதிலும், இவ்வாண்டு பிரேஸிலில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள், பாதுகாப்பாக நடைபெறுமென்ற எதிர்பார்ப்பை, உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் மார்கிரெட் சான் வெளியிட்டுள்ளார்.

நுளம்புகளை ஒழிப்பதற்கும் உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச ஒலிம்பிக் இயக்கம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுடன் பிரேஸில் அரசாங்கம் இணைந்து செயற்பட்டமை தொடர்பாகவும், பிரேஸில் அரசாங்கத்துக்குப் பாராட்டை வெளியிட்ட அவர், ஓகஸ்ட் 5ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பாக நம்பிக்கைகளை வெளிப்படுத்தினார். ஒலிம்பிக் போட்டிகளுக்காக பிரேஸிலுக்கு விருந்தினராகவோ, பங்குபற்றுநராகவோ அல்லது விளையாட்டு வீரராகவோ பிரேஸிலுக்குச் செல்லும் அனைவரது பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவித்த அவர், அவர்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்படுமெனத் தெரிவித்தார்.



டேவிட் மக்கலம்

## இறுதி சர்வதேச போட்டியில் சாதனை படைத்த மெக்கலம்

கிரிக்கட்

கிரைஸ்சேர்ஸ்சில் நடைபெறும் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 2 ஆவதும் இறுதியுமான போட்டியில் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிவேக சதத்தை பதிவுசெய்த வீரர் என்ற சாதனையை நியூசிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மெக்கலம் நிலைநாட்டியுள்ளார்.

தனது 101 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் பிரண்டன் மெக்கலம் 54 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு சதத்தை பெற்றுள்ளார்.

ஏற்கனவே 1986 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிராக மேற்கிந்திய தீவுகளின் சேர் விவியன் ரிஜ்சட்டும், 2014 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்கெதிராக பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக்கும் 56 பந்துகளில் சதம் பெற்று சாதனையை தம்வசம் வைத்திருந்தனர்.


இந்த நிலையில் தனது இறுதி சர்வதேச போட்டியில் விளையாடும் பிரண்டன் மெக்கலம், தனது சாதனை குறித்து கருத்து வெளியிடும் போது, அனைத்து பந்துகளிலும் நான்கு அல்லது ஆறு ஓட்டங்களையே பெற முயன்றதாக கூறியுள்ளார்.

## போட்டியின் போது வீரர் தாக்கப்பட்டார்

மல்யுத்தம்

இந்தியாவை சேர்ந்த மல்யுத்த வீரரான தி கிரேட் காளி போட்டி ஒன்றின் போது பலத்த காயமடைந்ததையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவை சேர்ந்த மல்யுத்த வீரரான தலிப் சிங் ராணா எனப்படும் தி கிரேட் காளி றுறுநு போன்ற போட்டிகளில் பங்கேற்று புகழ்பெற்றவர். இந்நிலையில் உத்தரகாண்ட் மாநிலம் ஹால்ட்வானியில் நடைபெற்ற மல்யுத்த போட்டி ஒன்றில் அவர் கலந்து கொண்டபோது கனடா நாட்டை சேர்ந்த 3 போட்டியாளர்களுடன் அவர் மோதினார். அப்போது சக போட்டியாளர்கள் அவரை நாற்காலி மூலம் தாக்கியதில் பலத்த காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.



## மூன்றாம் முறையாக சிக்கலில் ஆரோன் பாங்கிசோ

கிரிக்கட்

தென் ஆப்பிரிக்கா அணியை சேர்ந்தவர் ஆரோன் பாங்கிசோ. இடக்கை சுழற்பந்து வீச்சாளரான இவர் 20 ஓவர் உலகக் கிண்ணத்திற்கான தென் ஆப்பிரிக்க அணியிலும் இடம் பெற்றுள்ளார்.

இந்நிலையில் உள்ளூர் ஆட்டம் ஒன்றில் கலந்து விளையாடிய பாங்கிசோவின் பந்துவீச்சில் சந்தேகம் எழுந்தது. அவரது பந்துவீச்சு சர்வதேச கிரிக்கெட் சங்கத்தின் விதிமுறைகளுக்கு எதிராக உள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு சோதனை நடத்த ஐ.சி.சி. உத்தரவுட்டுள்ளது. மார்ச் 8ம் திகதிக்குள் அவர் பந்துவீச்சை முறையை நிரூபிக்க வேண்டும்.

ஏனென்றால் அதன்பின் உலக கிண்ணத்திற்கான அணியில் மாற்றம் செய்ய முடியாது. இந்த ஆண்டில் மட்டும் அவர் மூன்றாவது முறையாக சர்ச்சையில் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நடுவருக்கே “சிவப்பு அட்டை”



துருக்கியில் நடக்கும் சூப்பர் லீக் கால்பந்து போட்டியில் இஸ்தான்புல்லை சேர்ந்த கலாட்டாசாரே-டிரப்ஜான் அணிகள் மோதின. இதில் வீரர்களின் மோசமான நடத்தை காரணமாக டிரப்ஜான் அணியின் ஹர்மாச்சி, டெமிர் ஆகிய இருவரும் இரண்டு முறை மஞ்சள் அட்டை பெற மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் 86வது நிமிடத்தில் அதே அணியை சேர்ந்த கவாண்டாவும் வெளியேற்றப் பட்டார்.

இதனால் கோபமடைந்த வீரர்கள் நடுவர் டெனிஸ் பிட்னெலை முற்றுகையிட்டு வாக்குவாதம் செய்தனர். பின்னர் தர்சுன் என்ற வீரர் நடுவரிடம் இருந்த சிவப்பு அட்டையை பிடுங்கி அவருக்கே காட்ட பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் தர்சுனும் மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். இந்தப் போட்டியில் கலாட்டாசாரே அணி 2-1 என கோல் கணக்கில் டிரப்ஜான் அணியை வீழ்த்தியது.


## ஓய்வு பெறவுள்ள மலிங்கா

கிரிக்கட்

டி20 உலக கிண்ணத் தொடருக்கு பின் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதாக இலங்கையின் பந்துவீச்சாளர் மலிங்கா சூசகமாக தெரிவித்துள்ளார். இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா உலகளவில் முன்னணி பந்து வீச்சாளராக திகழ்ந்து வருகிறார். இதுவரை 30 டெஸ்ட் போட்டிகள், 191 ஒருநாள் போட்டிகள் மற்றும் 62 டி20 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 470 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். சமீப நாட்களாக காயத்தில் அவதிப்பட்டு வரும் அவர், யு.ஏ.இ. அணிக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாகவே பந்துவீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார் ஊடாக இலங்கையை இணைப்பதில் இந்தியா தீவிரம்



சிறிலங்காவுடன் தரைவழிப்பாதை - யொன்றை ஏற்படுத்திக்கொள்ளும் இந்திய முயற்சிக்கு ஸ்ரீலங்காவின் அரசும் பச்சைக்கொடி காட்டியிருப்பதாகக் கசிந்துள்ள தகவல்களை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல்கயில் இவ்விடயம் நம்பத்தகு வட்டாரங்களில் இருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு இந்திய மத்திய அமைச்சர் நிதின் கட்காரி வழங்கிய செவ்வியில் இரண்டு நாடுகளும் தரைவழிப் பாதையொன்றை அமைக்கும் திட்டத்தில் கடும் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவித்திருந்தமை........

பக் 17



நிதின் கட்காரி

## அனல் மின் பணிகள் 2 மாதங்களில் ஆரம்பம்

திருகோணமலை, சம்பூர் அனல் மின் நிலையப் பணிகள் அடுத்த இரு மாதங்களுக்குள் ஆரம்பமாக - வுள்ளதாகத் தெரிகின்றது.

அனைத்து அனுமதிகளும் உரிய முறையில் பெறப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள சக்தி வள அமைச்சர் இந்திய முதலீட்டுடன் இணைந்த ஸ்ரீலங்காவின் முதலீடும் இத்திட்டத் - தின் நிதியீட்டத்திற்காகப் பயன்படும் எனத் தெரிவித்துள்ளார்.

"இந்த திட்டத்துக்கான எல்லா சட்ட ரீதியான அனுமதிகளும் பெறப்பட்டு விட்டன. சுற்றுச்சூழல் அமைப்புகள், கிராமவாசிகளினதும் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் அதிகார - சபையிடம் இருந்து கடந்த 2ஆம் நாள் சுற்றாடல் பாதிப்புகள் குறித்த அறிக்கை கிடைத்துள்ளது,

2020ஆம் ஆண்டு மின்சார உற்பத்தியை ஆரம்பிக்கும் வகையில் இந்த அனல் மின் நிலையத்தைக் கட்டி முடிப்பதற்கான கேள்விப்பத்திரங்களை அமைச்சு கோரவுள்ளது.

இந்த திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாவது கட்டங்கள் அடுத்த சில மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படும்." என அவர் ஊடகங்களுக்குச் செவ்வியுள்ளார்.

எனினும் சுற்றுச்சூழல்

பக் 17

## ஹரிஸ்ணவியின் மரணத்திற்கு நீதி கேட்டு திருமலையில் போராட்டம்

வவுனியா பாடசாலை மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவியின் மரணத்திற்கு நீதி கோரி திருகோணமலை மாவட்ட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அமைப்பினால் கவனயீர்ப்பு போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று (26) திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு அருகில் இடம்பெற்றது.

தண்டனை வழங்கு அரசே! குற்றவாளியை கண்டு பிடித்து மரண தண்டனையை வழங்கு! போன்ற பதாதைகளை ஏந்தியவாறு இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

பக் 17



## "முஸ்லிம்களுக்குத் தனி மாகாணம் வேண்டும்"

### -பசீர் முன்மொழிவு-

முஸ்லிம் மக்களுக்குத் தனியான - தொரு மாகாணம் உருவாக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் பசீர் சேகுதாவுத் முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

கடந்த 20ம் திகதி காத்தான்குடியில் நடைபெற்ற புதிய அரசியலமைப் - பிற்கான மக்கள் கருத்தறியும் அமர்வில் அவர் இக்கோரிக் - கையை முன்வைத்தார்.

"முஸ்லிம்கள் தனிமாநிலக் கோரிக்கையை எப்போதுமே

பக் 17

## பறை இசைப் பயிற்சி

திருகோணமலையில் பறை இசைப் பயிற்சி இன்று முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக அந்நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் பிரணவஜோதி மற்றும் நகுலன் ஆகியோர் தெரிவித்தனர். இப்பயிற்சி 27, 28, 29ம் திகதிகளில் உட்துறைமுக வீதியிலுள்ள செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்தில் இலவசமாக நடைபெறுகின்றது. ஆர்வமுடைய அனைவரும் கலந்து கொள்ளலாம்.

தொடர்பு - ஜோதி 077 244 6801

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.

159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738




இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 27.02.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org